விலை ரூபா 2=00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆடி 27 ஜுலை 23 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (11—8—85) இதழ் 182

## குண்டு விபத்திலிருந்து எயர்லங்கா விமானம் தப்பியது!

(கொழும்பு)

குண்டு அபாயத்திலிருந்து எயர்லங்கா விமானம் தப்பியது

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்றுப் புறப்படவிருந்த இந்த விமானத்தில் மூன்று பொதிகளில் காகிதக் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. உரிய வேளையில் இவைகள் கண்டு பிடிக்கப்பட்டதால் குண்டு விபத்திலிருந்து விமானம் தப்பிக்கொண்டது. (பி)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
PERIODICALS DIVISION
LIBRARY

வவனியாவில் கண்ணிவெடி ● துப்பாக்கிச்சூடு ● தீவைப்பு

# ஐந்து பொலிஸார் பலி!

# பத்து சிவிலியன்கள் சாவு!

# 50 கடைகள் தீக்கிரை!

(அலுவலக, வவனியா நிருபர்கள்)

**வவனியாவில் நேற்றுக்காலை இடம்பெற்ற பொலிஸ் ஜீப் கண்ணிவெடிச் சம்பவத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பொலிசார் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஒரு பொலிஸ் ஆஸ்பத்திரியில் படுகாயமுற்றார்.**

**இதனைத்தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பொதுமக்களில் 10பேர் கொல்லப்பட்டனர்; 21 பேருக்குமேல் படுகாயமுற்றனர். சுமார் 50 கடைகளும் பல வீடுகளும் எரிக்கப்பட்டன.**

**பலகடைகள் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.**

நேற்றுக்காலை 8 மணியளவில் வவனியா பொலிஸ் நிலையத்திலிருந்து மன்னார் வீதியூடாக ஜீப் பொன்றில் ஆயுதம் தாங்கிய பொலிசார் சென்று கொண்டிருந்தபோது வயிரவப் புளியங்குளம் என்னுமிடத்தில் இக்கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்றது.

ஜீப்வண்டியில் சென்ற 6 பொலிஸாரில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5பேர் ஸ்தலத்தில் பலியானார்கள். 25 வயதான ரண வீரபண்டார (மாத்தளை) என்பவர் படுகாயமுற்று ஹெலிகொப்டர் மூலம் வவனியா ஆஸ்பத்திரிலிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

கண்ணி வெடிப்பச்சம்பவத்தின்போது தச்சுத்தொழிற்சாலையி வேலைசெய்துகொண்டிருந்த சிறிசேன 20 வயது) என்பவரும் படுகாயமுற்றார்.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு வந்த பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எரு ஏற்றிவந்த லொறி ஒன்றை நோக்கிப் பொலிஸார் சுட்டதில் கிளிநொச்சியைச் சேர்ந்த ரஞ்சன் [8 வயது] மரணமானார். சுன்னாகத்தைச் சேர்ந்த சாரதி தர்மகுலசிங்கம் [28 வயது], கே. செல்வரத்தினம் [34

(12-ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் வழிமுறையைப் பின்பற்றி

## ஒன்பது மாகாணங்களுக்கும் 9 மாகாண சபைகள்

### 'இந்து' பேட்டியில் அரசின் விருப்பம்பற்றி லலித்

(புதுடில்லி)

''பஞ்சாப பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கையாண்ட வழிகளையே எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பயன்படுத்த நாம் திட்டமிட்டிருக்கிறோம்''.

இவ்வாறு தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இந்துபத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

இப் பேட்டியில் அமைச்சர் அத்துலத்முதலி மேலும் தெரிவித்திருப்பதாவது:

''எமது பிரச்சினை சம்பந்தமாக அநேக விஷயங்களுக்கு விரைவான தீர்வுகாணமுடியும் எனினும் ஒரு சிலவிஷயங்களில் தீர்வுகாண்பதில் சிரமங்கள் ஏற்படலாம். ஆனாலும் அவற்றையும் நாம் தீர்த்துக் கொள்ள முடியும். ஒன்பது மாகாணங்களையும் ஒன்பது மாகாணசபைகளாக் குவதற்கு

(12-ம் பக்கம் பார்க்க)

நேற்று கொழும்பு சென்ற

## யாழ்தேவி பயணிகள் புளியங்குளத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்ற யாழ்தேவி ரயில் புளியங்குளம் ரயில் நிலையத்தை அடைந்ததும் அதில் இருந்த பிரயாணிகள் இறங்கி மீண்டும் தமது இடங்களுக்குத்திரும்பியதாகத் தெரியவருகிறது.

எனினும் நேற்றிரவு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட மெயில் ரயிலில் அதிகமான பிரயாணிகள் கொழும்பு சென்றதாக யாழ்ப்பாண ரயில் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (மா)

## ரயில்சேவை பாதிப்பு

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப்புறப்பட்ட மெயில் ரயில் வண்டி மாகோவுடன் திரும்புகிறது.

மாகோவுக்கு அண்மையில் நாவெல்லகம என்னும் இடத்தில்சரக்குவண்டி தடம்புரண்டதைத்தொடர்ந்து இந்த ரயில் திரும்பவேண்டி ஏற்பட்டது.

இதேவேளை கோட்டை காங்கேசன்துறை மெயில் ரயில்சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. (மா)

## மாமடுவில் தற்காலிக ராணுவ முகாம்

(வவனியா)

வவனியா மாமடுவ என்ற இடத்தில் தற்காலிக இராணுவ

(12-ம் பக்கம் பார்க்க)

ஆயுத இளைஞர்கள்

## ஊர்காவற்றுறைப் பகுதியில் வீடுகளில் கொள்ளை!

[வேலணை]

வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆயுதம் தாங்கிய குழுவினர் நான்கு வீடுகளில் பலலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வேலணை மேற்கு பொ. முத்துத்தம்பி, சுருவில் த. ஏகாம்பரம், திருமதி திரேசா, ஏரம்பன் எஸ் விஜயகமூர்த்தி ஆகியவர்களின் வீடுகளில் இக்கொள்ளைகள் இடம்பெற்றன.

இரண்டு வாகனங்களில் சிறுடையில் வந்த சுமார் இருபத்தைந்து இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது. தீவுப்பகுதிகளில் இடம்பெற்ற முதலாவது பெருங்கொள்ளை இது எனக்

(12-ம் பக்கம் பார்க்க)

## பென்சனர் சங்கங்களுடன் அரச அதிபர் ஆலோசிப்பார்

[கல்வியங்காடு]

சகல ஓய்வூதியம் பெறுவோர் சங்கங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் யாழ் அரச அதிபர் திரு வை மு பஞ்சலிங்கம் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

தற்போது புனரமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ள ஓய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைகள் பற்றியும், இனிமேல் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், சகல ஓய்வூதியம் பெறுவோர் சங்கத் தலைவர்களுடன் அல்லது செயலாளர்களுடன், தாம் கலந்தாலோசிக்கத் தீர்மானித்திருப்பதால், ஓய்வூதியச் சங்கத் தலை

(12-ம் பக்கம் பார்க்க)

யாழ் பல்கலைக்கழகத்தில்

## சம்பிரதாயங்களைப் பேணிய பட்டமளிப்பு வைபவம்

[ஏ வி எம்]

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமானது

பட்டம் பெறுவோர் யாழ் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவு இயங்கும் பிரதான கட்டடத்திற்கு முன்னால் அணிவகுத்து ஊர்வலமாகச்சென்று கொண்டிருந்தனர்.

பட்டம் பெறுவோரைத் தொடர்ந்து பதிவாளர், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள் உபவேந்தர் ஊர்வலத்தில் இருபக்கமும் ஆலவட்டம் பிடிக்கப்பட்டு குடையின்கீழ் யாழ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் கலாநிதி தம்பையா நடராசா வெண் தலைப்பாகையுடன் நடைபவனியாகச் சென்றுகொண்டிருந்தனர்.

பட்டம் பெறுவோர் கலை அரங்கின் பார்வையாளர் பகுதியில் தமக்கொதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். முன்வரிசையில் விசேஷமாக அழைக்கப்பட்டிருந்த பிரமுகர்கள் இருக்கக் காணப்பட்டனர் அதில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளும் இருந்தார்

துறைத்தலைவர்கள் பேரா

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி ளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கருகாமையில் பலாலி ரோட்டில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T. சிவராசா, 43Aகொட்டடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 4926

தொழிற்சாலை உற்பத்தியின் போது பழுதடைந்த அலுமினிய பாத்திரங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர், 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 4836

சுதுமலை அம்மன் கோவிலுக்குப் பின் வீதிக்கு அண்மையில் 250 யார் தூரத்தில் பிரயோசனங்களுடன் கூடிய 8½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கே ரி செல்லத்துரை, நாவலடி லேன், மானிப்பாய் 4925

பாவித்த நல்ல நிலையில் உள்ள NV 7200 EN டெக் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: குணம் வீடியோ சென்ரர், 42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி 23665 (4966)

புரோயிலர் (Broiler) குஞ்சுகள் விற்பனைக்குண்டு: எம். ஜீ. எம். போரேஜ் ஸ்ரோர்ஸ், 781, K. K. S. Rd, 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், T. P. 22611. 4970

முட்டையிடும் இனக்கோழிக் (Day Old Chicks) குஞ்சுகள் விற்பனைக்குண்டு:- எம். ஜீ. எம். போரேஜ் ஸ்ரோர்ஸ், 781, K K S Rd, 208 முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். T. P. 22611 (4969)

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ மொறிஸ் மைனர் கார், 1985-ம் ஆண்டிற்குரிய ராக்ஸ், இன்சூரன்சுடன் விற்பனைக்கு விபரங்களுக்கு: காந்தி கபே, 41, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 4975

## விற்பனைக்கு

சுண்டுக்குழி, சென்ஜோன்ஸ் பாடசாலை, தபாற்கந்தோர் பஸ்தரிப்பு நிலையம். புகையிரதநிலையம் என்பனவற்றிற்கு வசதியுள்ள 3 1/2 பரப்புகாணி புங்கங்குளம் ரோட்டில் 7 1/3 நம்பரில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதித தணிகாசலம் 66, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (4958)

மாகியப்பிட்டி சந்தியிலிருந்து, அளவெட்டி ரோட்டில் 150 யார் தூரத்தில், முன்பு முறிவு தறிவு வைத்தியம் செய்த கடைக்குப் பின்புறமாக 3 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நா சபாநாதன், பொலிஸ் நிலையத்தடி, சுன்னாகம். 4918

மல்லாகம் கோட்ஸ் ரோட்டில் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக் காணி நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: திரு மாணிக்கசுந்தரம், கோட்ஸ் ரோட், மல்லாகம். 4980

இரண்டு வருட நல்லின அல்சேஷன் பெண் நாய் [Black and Grey] உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பி மனோகரதாசன், நவாலி தெற்கு, அரசடி ஒழுங்கை, மானிப்பாய் 4999

### WANTED

Wanted part-time Cashier-cum-clerk with knowledge of English Apply in writing: The Medical Hall, 224, Hospital Road, Jaffna 4990


### வைத்தியம்

மனநோய், காக்கைவலி, அழலை, கட்டிகள், சர்மரோகங்கள், தேக எரிவு, நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். தொடர்பு: டாக்டர் எம். வி. தில்லைசந்ரன், Homoeopath, 218, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 4949

## 31-ம் நாள் நினைவஞ்சலி

நயினை

### நாகநாதர் கணபதிப்பிள்ளை



எல்லாப் பிறப்பும் பிறந்திளைந்தேன்

09-07-1908

பொன்னடிகள் கண்டின்று விடுற்றேன்

12-07-1985

உற்றபோது உளக்கியும் உறுபொருள்கள் உதவியும்
கற்றகல்வி கைவரக்காத்து எம்மைப் போற்றியும்
பெற்ற அன்று இன்றுமே பெரிதுவந்து வாழ்த்தியும்
அற்றவர் தம் அரும்பசி அமகூட்டிப் போக்கியும்
சுற்றம் மற்றும் ஊரவர் துணைக்கரமாய் துலங்கியும்
பற்று வைத்து வாழ்ந்த உம் பாதம் பற்றி நிற்கிறோம்
மற்றுப் பற்று இன்றி எம் மனது பற்றும் பற்று நீர்
சற்று வந்து தந்தைநீர் சாந்தி தந்து வாழ்த்துவீர்.

வந்தனை செய்தோம் வாழ்க நின்நாமம்
எந்தையே எய்துக இறைவனின் அடிக்கீழ் இன்பம்,

இங்ஙனம்
அன்பு மனைவி
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கலைமாமணிவாசம்''
நயினாதீவு - 3

4989

## மணப்பந்தல்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இந்து உயர்குல வேளாளர் குலத்தைச் சேர்ந்த மகனுக்கும். மகளுக்கும் மாற்றுமணம் செய்துவைக்க விரும்புகிறார். மகன் 34 வயதுடையவரும் London னில் Engineer (H N: D.) ஆக வேலை பார்ப்பவரும், மகள் 36 வயதுடையவரும் Advance Leavel சோதனை எடுத்தவருமாவார். மணமகன் குறைந்தது Advance Leavel சித்திபெற்றவரும், சுத்த போசமானவரும் விரும்பப்படுவர். சாதகக் குறிப்புகளையும் குடும்ப விபரத்தையும் அனுப்பி வைக்கவும். தொடர்பு விளம்பர இல: 4915, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 4915

உயர் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 36 வயதுள்ள அழகும் குணமும் பொருந்திய, மகளுக்கு குடும்பத்தினர் மணமகனை தேடுகின்றனர் சொந்தத் தொழில் அல்லது உத்தியோகமுடைய கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த குணநலன் பொருந்தியவர் எதிர்பார்க்கப்படுகிறார். நல்ல வசதியான புதுவீடும், போதிய நகைகளும், தகுந்த பணமும் தரப்படும் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 4997 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4997

## தேவை

புடவை வியாபாரம் செய்யக்கூடியதும் அனுபவமுமுள்ள பெண்கள் தேவை. யாழ்ப்பாண மாநகர சபைக்குள் வசிப்பவர்கள் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். 4912

பிரபல தொழிற்சாலைக்கு நவீன லேத் மெசினில் வேலை செய்யக்கூடிய 5 வருட அனுபவத்திறன் வாய்ந்த லேத்மன் தேவை அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர், 118 (198), கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 4938

தராதரப் பத்திரமுள்ள தையல்கலை பயிற்றும் ஆற்றலுள்ள ஆசிரியை நல்லூர் ஜேம்ஸ் தேவாலய மன்றத்தில் [வேலைநேரம் 1-30 - 4-30 மாலை] செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ்ப்பாணம் Y. M. C. A. [கச்சேரியடி] இல் நேரில் சந்திக்கவும். 1

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### இறே நைலக்ஸ் கேள்விமூலம் விற்பனை

பாவு 140
ஊடை 72'' அகலம் 46''

மேற்குறிப்பிட்ட அளவினை உடைய 10850 மீற்றர் இறே நைலக்ஸ் விற்பனைக்குண்டு. விரும்புவோர் மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் ரூபா 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கும் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 26-8-85. விண்ணப்பங்களாவும் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை
10-8-85. (4992)

## மூளாய் வாசிகளின் முத்தான கண்ணீரை துடைத்துதவ முன்வர வேண்டுகிறோம்

தமிழ்மக்களின் சேவைகள் யாவற்றையும் பொறுப்பேற்று இயங்கும் இயக்கங்கள் என்ற அணையா விளக்காய் விளங்கும் சகல இயக்கங்களுக்கும் இனந்தெரியாத நபர்களுக்கும் பணிவன்புடன் வேண்டுவது

இக்காலகட்டத்தில் அல்லல்படும் மக்களுக்கு மதிப்பளித்து சமூகசேவைக்காக தன்னையே அர்ப்பணித்த வெகுஜன இயக்கத்தலைவர் திரு வை. இராஜசுந்தரம் அவர்கள் இனந்தெரியாத நபர்களால் 7-8-85 அன்று கடத்தி செல்லப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்ய-செய்விக்க உதவுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்

இப்படிக்கு
தங்கள் சேவையில் அசையாத
நம்பிக்கை வைத்திருக்கும்
மூளாய் வாசிகள்.

5

## கேள்விப்பத்திரம் கோரல்

திருநெல்வேலி முத்துத்தம்பி இந்து அநாதை இல்லத்தில் அலுவலகமும் நூல்நிலையமும் கட்டுவதற்கு கட்டிட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது இவற்றை பதிவு செய்த தபாலில்

திரு. இ விஜயரட்ணம்,
பொறுப்பதிகாரி
முத்துத்தம்பி இந்து அநாதை இல்லக் கட்டிடத்திட்டம்,
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், சித்தன்கேணி
என்ற முகவரிக்கு
30-08 85-ந் திகதிக்கு முன்னர்
கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்
கேள்விப்பத்திரம், வரைபடம் மற்றும் விபரங்களை
25-08 85-ந் திகதி வரைக்கும்
''குணசிங்கம் அசோசியேட்'', கட்டிடக்கலைஞர்,
இலக்கம் 28, 4-ம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
என்பவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
[4916]

## உருக்கமான வேண்டுகோள்

நாங்கள் பலாலிகோட்டையிலிருந்து 1981-ம் ஆண்டு ஜூலை மாதம் கலவரத்தின் பொழுது வீடு, வாகனம் எரிபட்டு வீட்டில் உள்ள சகல பொருட்களையும் இழந்தோம்.

பிற்பாடு 1983-ம் ஆண்டு கொழும்பிலுள்ள வீடு எரிபட்டு அங்குள்ள பொருட்கள் முழுசக இழந்து புளியங்குளத்தில் வந்து விவசாயம் செய்துகொண்டிருக்கின்றோம். 1984-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாம் வீட்டில் இல்லாத பொழுது அடுத்த கமத்தில் உள்ளோர் வீட்டை உடைத்து இங்குள்ள பொருட்களைக் களவாடினார்கள் பொலிஸில் பிடித்து கொடுத்தும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

இம்மாதம் 5-ம் திகதி திங்கட்கிழமை இரவு இனம்தெரியாத ஆயுதம் தாங்கிய 5 இளைஞர்கள் எங்களைப் பயமுறுத்தி, இங்குள்ள தண்ணீர் பம்ப், மின் இயக்கும் கருவி (Lighting plant), மிளகாய், உழுந்து மற்றும் பொருட்கள் எல்லாம் 50,000/- பெறுமதிக்கு களவாடப்பட்டன

எங்களின் விவசாயச் சீவனத்தை மனதில் வைத்து களவாடியவர்கள் மனிதாபிமான முறையில் மிளகாயையும், உழுந்தையும் எடுத்துக்கொண்டு தண்ணீர் பம்பையும், மின் இணைக்கும் கருவியையும் தயவுசெய்து திருப்பிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

க. கனகசபை தம்பதிகள் (4961)

## ஓராண்டு நினைவஞ்சலி

### ஆசிர்வாதம் விஜிற் விமலராஜா

படைப்பு: 28 – 01 – 63



அழிப்பு: 11 – 8 – 84

ஓராண்டு அகன்றும் உன்நினைவு அகலாது கண்ணீர் சிந்துகிறோம்.

தாய், தந்தை, சகோதரர், சகோதரி, பேரன், பேர்த்தி, மாமா, மாமி, அன்ரிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

4979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# (கி.மு. 240ன் பின் 29வது தடவையாக 1985 நவம்பர்- 1986 யூன் வரை புவியியல் தோற்றவுள்ளது ஹேலியின் வால்வெள்ளி. ஞாயிற்றுத்தொகுதி, கோள்களின் பிறப்பு, புவியின் தோற்றம் பற்றிய பல அரிய புதிர்களை அறிய விஞ்ஞானிகளும், ஆய்வு நிறுவனங்களும் சர்வதேசரீதியில் தயாராகியுள்ளனர்.

## ஹேலியின் வால்வெள்ளி

✶ வ. மகாதேவன்

சுமார் 75 ஆண்டுகள் சென்றபின் 1985 நவம்பர் முதல் 1986 ஜூன் வரை ஹேலியின் வால்வெள்ளி [Halley's Comet] எமக்குத் தென்படவிருக்கிறது கி.மு. 240க்குப்பின் 29வது தடவையாக இது பூமிக்குத் தோற்றமளிக்க உள்ளது. இம்முறை தென்படும்போது இவ்வால் வெள்ளியை அல்லது தூமகேதுவை நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட விண்கலங்கள் மூலம் அருகில் ஆராய்ந்தறிவதற்கு வானியல் வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பல திட்டங்களைச் செயற்படுத்த உள்ளனர். ஊடுருவிச் செல்லவிருக்கும் விண்கலங்கள் பலவிதப்பட்ட தரவுகளைச்சேகரிப்பதுடன் இவ்வெள்ளியின் வர்ணத் தொலைக்காட்சிப் படங்களையும் பூமிக்கு அனுப்பவுள்ளன.

அதிக செலவில் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள இவ்வாராய்ச்சிகள் மூலம் ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் [பிறப்பு]. கோள்களின் தோற்றம், அண்டத்தின் தோற்றம், புவியின் தோற்றம் தொடர்பான புதர்களுக்கு புதிய விளக்கங்களை அறிந்து கொள்வதற்கு அரிய வாய்ப்புகள் கிடைக்கும் எனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆய்வுகள்

ஐக்கிய அமெரிக்க தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (N.A.S.A.) ஐந்து விண்கலங்களையும், ஜப்பான் MS-TS, Planet A எனப்படும் இரு விண்கலங்களையும், சோவியத் ரஷ்யா, Verga 1, Verga 11 ஆகிய இரு விண்கலங்களையும், ஐரோப்பிய விண்வெளி ஏஜன்சி (E.S.A.) சியோற்றோ [Capital] என்ற விண்கலத்தையும் செலுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளன. சியோற்றோ 2-7 1985 இல் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுவிட்டது. சியோற்றோவைச்சரியான பாதையில் இயங்க வைப்பதற்கு சோவியத் விண்கலங்கள் இரண்டும் உதவி புரியும். 13-3-1986 இல் வால்வெள்ளியின் தலையிலிருந்து [உள்ளகதிலிருந்து] சுமார் 300 மைல் அல்லது 500 கிலோ மீற்றர் தொலைவில் சென்று வர்ணத் தொலைக்காட்சிப் படங்கள் பலவற்றைப் பிடித்து பூமிக்கு அனுப்பும். இவற்றைவிட ஒரு விண்வெளி ஆய்வு கூட (Sky lab) ஆராய்ச்சியும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது 1986 நடுப்பகுதியில் 94 5 அங்குல விட்டமுள்ள கண்ணாடி பொருத்தப்பட்ட விண்வெளித் தொலைநோக்கியொன்றும் (Hubble Space Telescope] செலுத்தப்படவுள்ளது. எல்லாவற்றுக்கும்மேலாக இலங்கை உட்பட உலகெங்கும பரந்துள்ள சுமார் 90 அவதான நிலையங்களிலிருந்து தனிப்பட்டவர்களாலும் நிறுவனங்களாலும் இவ்வால் வெள்ளி தொடர்பான விபரங்கள் தொடர்ச்சியாகச் சேகரிக்கப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இலங்கையில் இத்தகைய அவதானிப்புகளை தொடர்புபடுத்தும் அதிகாரியாக பேராசிரியர் மகேஸ்வரன் பணியாற்றுவார்

### ஹேலியின் பங்களிப்பு

எட்மண்ட் ஹேலி (Edmund Halley) [1656 - 1742] என்ற பிரபல பிரித்தானிய விஞ்ஞானியே வால்வெள்ளிகள் தென்பட்ட காலங்களை ஒப்பு நோக்கி ஆராய்ந்து சுமார் 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒழுங்காக பூமிக்குத்தென்படும் ஒரு வால்வெள்ளி இருப்பதாக 1682இல் தமது 26வது வயதில் தெரிவித்தார் ஞாயிற்றுத் தொகுதியில் ஒர் ஒழுங்கான பாதையில் இது சென்று கொண்டிருப்பதனால் தான் இவ்வாறு நிகழ்கின்றது என்றும் மீண்டும் இவ்வெள்ளி 1758 அல்லது 1759 இல் தென்படும் என்றும் கூறினார். ஹேலி 1742 இல் காலமானார். ஆனால் அவருடைய கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வெள்ளி 1758-இல் தென்பட்டது. இதன்பின் இது ஹேலியின் வால்வெள்ளி (Halley's Comet) என்ற பெயரைப் பெற்றது.

இவ்வால் வெள்ளி கி.மு. 240-ல் தென்பட்டமைக்கு சீனாவிலுள்ள பதிவேடுகளில் ஆதாரங்கள் உள்ளன. கி.பி. 1456, 1531, 1607, 1682, 1758 1835, 1910 ஆகிய ஆண்டுகளில் இது பூமிக்குத் தோற்றமளித்திருக்கிறது. அடுத்து 1986 இலும் 2061 இலும் இது தோன்றும். கி.மு. 240க்கும் கி.பி. 1546க்கும் இடையில் கி.மு. 164, 88, 12, கி.பி. 66 837, 1066, 1301 ஆகிய ஆண்டுகளிலும் இது தென்பட்டிருக்கிறது இத் தொகுதியில் இது தோற்றமளித்தஎல்லா ஆண்டுகளும் சேர்க்கப்படவில்லை. (விபரம் தெரியவில்லை]

இவ்வெள்ளி தென்பட்ட ஆண்டுகளில் கி.பி. 837 இல் பூமிக்கு மிக அண்மையாக 30 லட்சம் மைல் அல்லது 50 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் சென்றதாக அறியக் கிடக்கிறது.

9-2-1986 இல் இவ்வால் வெள்ளி ஞாயிற்றுக்கு மிகவும் அண்மையான தூரத்தை கிறினிச் பொது நேரப்படி (G.M.T.) பகல் 10-00 மணிக்கும் 11-00 மணிக்கும் இடையில் சென்றடையும் எனக் கணித்துக் கூறப்படுகிறது 11-4-1986 இல் பூமிக்கு மிகவும் அண்மைத் தூரமாகிய 3 கோடியே 90 லட்சம் மைல் அல்லது 6 கோடியே 30 லட்சம் கிலோ மீற்றர் என்ற தொலைவை அடையும் என்றும் கணிக்கப்பட்டிருக்கிறது

### தோன்றும் இடங்கள்

இம்முறை இவ்வால்வெள்ளி தென்னரைக் கோள வாசிகளுக்கே கூடுதலான தெளிவுடன் தோற்றமளிக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. வடவரைக் கோள வாசிகள் சக்தி குறைந்த தொலைநோக்கி அல்லது Binoculors மூலம் 1985 நவம்பர் முதல் 1986 ஜனவரி வரை பார்வையிடலாம். 1986 ஜனவரியில் வெற்றுக்கண்களுக்கும் தென்படும். தென்னரைக்கோளவாசிகள் 1986 மார்ச் முதல் ஜூன் வரை சக்தி குறை தொலைநோக்கி அல்லது Binoculors மூலமும் 1986 மார்ச் - ஏப்ரல் மாதங்களில் கருவிகளின் உதவியின்றியும் பார்வையிட முடியும்.

இலங்கை வாசிகள் ஹேலியின் வால்வெள்ளியைத்தெளிவாகப் பார்வையிடுவதற்கு விரும்பினால் எமது நாட்டின் தென்பகுதியிலுள்ள தெவிநுவரைக்கு அல்லது தேவேந்திர முனையை அடுத்துள்ள இடங்களுக்கு 1986 ஏப்ரல் மாதத்தில் செல்ல வேண்டும் என்று எமது நாட்டுப் பிரபல விஞ்ஞானியாகிய பேராசிரியர் சிறில் பொன்னம்பெருமா ஆலோசனை கூறியுள்ளார்.

தென்னரைக் கோளத்தில் தெளிவாகத்தென்படும் என்ற காரணத்தால்வானியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், ஆராய்சியாளர், உல்லாசப் பயணிகள் ஆகியோர் அவுஸ்திரேலியா, நியூசீலாந்து, தென்னாபிரிக்க நாடுகள் போன்றவற்றிற்குச் சென்று சிலவாரகாலம் தங்கியிருப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர். அவுஸ்திரேலியாவின் மத்தியில் உள்ள அலிஸ் ஸ்பிரிங்ஸ் (Alice Springs) பொற்ஸ்லானா நாட்டிலுள்ள கலகாரிப்பாலைவனம் [Kalahari Desert] போன்ற இடங்களுக்கும் சில விஞ்ஞானிகள் செல்வதற்கு உள்ளனர்.

### செல்லும் பாதை

1948 இல் 3300 கோடி [3.3 Billion] மைல்தொலைவிலுள்ள (ஞாயிற்றிலிருந்து] அதன் பாதையின் வெளிப்புற எல்லையிலிருந்து ஞாயிற்றை நோக்கித்திரும்பிய ஹேலியின் வால் வெள்ளி 1983 இல் சனிக்கோளத்தைத் தாண்டியது. 1985 இல்

(10-ம் பக்கம் பார்க்க)

## உனக்குமா, பீ.பீ.சி!

"நீயுமா, புறூட்டஸ்" என்ற பேரதிர்ச்சியில் வீழ்ந்து மடிந்தான் மாவீரன் சீசர். ஷேக்ஸ்பியரின் யூலியஸ் சீசர் நாடகத்தில் இக்காட்சி மிகச் சோகமானது.

நண்பன் இவ்வாறு சதிகாரருடன் சேர்ந்து தன்னைக் கொல்ல முயன்றதைச் சீசர் நம்பமுடியவில்லை. எனவே வாள்வெட்டிலும் பார்க்க பேரதிர்ச்சியே கொலையை நிறைவேற்றியது.

இன்று உலகம் 'உனக்குமா இக்கதி' என்று பீ பீ சி.யைக் கேட்கிறது 36 மொழிகளில் உலகில் பன்னிரண்டரைக் கோடி மக்கள் தினமும் கேட்டு ரசிக்கும் சுதந்திர ஸ்தாபனம் பீ. பீ சி. 53 வருட தளப்பமற்ற சேவை வரலாற்றில் கடந்த புதன்கிழமை 24 மணிநேரம் மௌனம் சாதிக்க நேரிட்டது.

அரசின் ஆதரவில் இயங்கியபோதும் B. B. C. தனக்கென ஒருதனித்துவ ஆட்சி முறையை வளர்த்து வந்தது.

இதற்குக் காலனாக வந்தது உள்துறை அமைச்சர் பிரிட்டானின் கோரிக்கை. கடந்த புதன்கிழமை நிகழ்ச்சியாகவிருந்த ஐ. ஆர். ஏ. தலைவனின் பேட்டி, இன்றைய சூழ்நிலையில் பொருத்தமற்றதென்ற காரணத்தால் அதனை ரத்துச் செய்யும்படி அவர் கேட்டிருந்தார்.

அமைச்சர் பிரிட்டான் ஒரு ஆபத்துக்காரர் என்பதை நாமறிவோம். இன்று திருமதி தாட்சரின் விருப்பு வெறுப்புக்கு அடிபணிந்து இக்கோரிக்கையை விடுத்திருந்தார்.

பீ. பீ. சி. அதிகாரசபை, அவசரக் கூட்டத்தில் அதற்கு 'ஆமா' சொல்லியது.

பீ. பீ. சி. தலைவர் திரு. யங் என்ன செய்வதென்றறியாது அதிகாரத்துக்குச் சரணடைந்தார்.

'களவும் கற்று மற' என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும், சுதந்திர தாகமுடைய பிரிட்டிஷ்மக்களின் ஏமாற்றத்தைப் பிரதிபலிக்க பீ பீ சி பத்திரிகை வழியர் அனைவரும் அன்று வேலைநிறுத்தினர்

'நம்பிக்கைச் சொத்துக்கு நடந்ததென்ன?' என்று ரசிகர் உலகம் கவன்றது. சேர்ச்சிலின் சாந்தி குழம்பிற்று உடனே தடை நீங்கியது.

## ஜெர்மன் கூண்டிலே தத்தளிக்கும் இலங்கைக்கிளிகள்

கோண்டாவிலூர்
க. கனகசிங்கம்

மனிதன் செயற்கையாகச் செய்த கூண்டுக்குள் இயற்கையாகப் பறந்து வாழும் கிளிகள், விருப்புடன் வாழ்வதே இல்லை. கூண்டுக்குள் அடைபட்ட கிளிகளுக்கு எவ்வளவு சுவையான உணவைக் கொடுத்தபோதும் திருப்தி ஏற்படுவதில்லை. கிளிகள் விரும்புவதெல்லாம் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்து மரங்களிலும் தோட்டங்களிலுமுள்ள காய்கனிகளைக் கொத்தித்தின்று தன் கூட்டத்துடன் வாழ்வதையே.

ஜெர்மனிக் கூண்டுக்குள் அடைபட்டுக் கத்தும் இலங்கைக்கிளிகளின் அழுகுரலை வெளியே யாரும் கேட்பதில்லை. கூண்டுக்குள் அடைபட்ட சோகம் தாழாது பைத்தியம்பிடித்த கிளிகள் இரண்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கிளிகள் அங்கு விடும் ஒவ்வொரு மூச்சிலும் 'ஏன் வந்தோம்' என்ற ஏக்கமும் ஏமாற்றமும் தொனிக்கின்றன.

இருபத்து ஒரு நாட்கள் நாரனபேர்ளினில் பெற்ற அனுபவத்தை இலங்கை திரும்பியதும் பத்திரிகையில் எழுதுங்கள் என்று சென்ற இடமெல்லாம் கேட்டதற்கிணங்க இதை எழுதுகின்றேன்.

ஹிட்லரின் கொடூர ஆட்சிக்குள் சிக்கிச் சித்திரவதைப்பட்டு லட்சக்கணக்கில் கொலை செய்யப்பட்ட ஜெர்மன் நாட்டுமக்கள் உலகில் மிக உயர்ந்த இரக்க சிந்தை படைத்தவர்கள். ஹிட்லரின் கொடூரத்திற்குப் பிராயச்சித்தமாக அவர்கள் உலக நாடுகளிலிருந்து வரும் அகதிகள் யாவருக்கும் அரசியல்தஞ்சம் கொடுத்து இருப்பிடவசதியும், மூன்று நேர சத்தான உணவும் கொடுக்கிறார்கள். அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கம் செய்யும்சேவையைப் பாரட்ட வார்த்தைகளே இல்லை. ஒவ்வொரு அகதிக்கும் ஒருநாளைக்கு முப்பதுமாக் (இலங்கைக் காசுக்கு சுமார் இருநூற்றைம்பது ரூபா) செலவு செய்கிறார்கள், உலக நாடுகளிலிருந்து சென்ற ஐந்து லட்சம் அகதிகள் அங்கு வாழ்கிறார்கள். அத்தனைபேருக்கும் வாழ்வளிக்கிறது செஞ்சிலுவைச் சங்கம்.

அகதிகளாகச் சென்றவர்கள் அகதிகளாக வாழ்ந்திருந்தால் நிச்சயம் அவர்கள் நன்மதிப்பைப் பெற்றிருக்கலாம். 1979, 1980, 1981ம் ஆண்டளவில் சென்றவர்கள் பலர் ஜெர்மன் மக்களின் அன்பையும் ஆதரவையும் இன்றும் புகழ்கிறார்கள். நெல்லோடு வளரும் புல்லைப்போன்று மனித இனத்தைக் கொல்லாமல் கொல்லும் போதைவஸ்தைக் கடத்தி ஜெர்மன் மக்களை அழிக்கத் தொடங்கிய கயவர்களால், அகதிகளைக் கண்டாற் காறித் துப்புமளவிற்கு ஜெர்மன் மக்கள் கொதிப்படையத் தொடங்கியுள்ளார்கள். போதைவஸ்துப் பாவித்துத் தம்மக்கள் இறப்பதைக் கண்டறிந்த ஜெர்மன் அரசு, கடத்தற்காரரை வேட்டையாடத் தொடங்கியது. அதன் பலாபலன் இன்று கிழக்கு பேர்ளின், மேற்கு பேர்ளின், ஜெர்மன்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—14

# சுந்தரரின் பதவி துறப்பு படலங்கள்!

இலங்கையில் வாழ்ந்த-வாழுகின்ற-அரசியல்வாதிகளில் திரு. செல்லையா சுந்தரலிங்கத்தைப்போல் தேர்தல்களிலும் அதிகளவில் போட்டியிட்டவர் எவரும் இலர்.

இரண்டாவது அரச சபையில் அங்கம் பெறுவதற்காக 1943-ம் ஆண்டிலும், 1944-ம் ஆண்டிலும் சுந்தரர் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இரண்டாவது அரச சபைக்கு 1943-ம் ஆண்டில் மன்னார் - முல்லைத்தீவுத் தொகுதியில் நடந்த உப தேர்தலில் சுந்தரர் முதல் தடவையாக போட்டியிட்டார். இதில் அவர் வெற்றிபெற முடியவில்லை. பின்னர் 1944-ம் ஆண்டில் இதே தொகுதியில் நடந்த மற்றொரு உப தேர்தலிலும் சுந்தரர் போட்டியிட்டார் இதிலும் அவருக்கு வெற்றி கிட்டவில்லை

தோல்வியே வெற்றியின் முதற்படி என்று தோல்வியை ஏற்றுக்கொண்ட சுந்தரர் சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 1947-ம் ஆண்டில் நடந்த முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் வவுனியாத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டார் இதில் சுந்தரர் வெற்றியீட்டி எம். பி. யானார்.

### அமைச்சர் பதவி

முதலாவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் தமிழ்த் தலைவர்கள் டி. எஸ். சேனநாயக்கா அரசுக்கு எதிராகவே செயல்பட்டனர். சுந்தரர் மட்டும் டி.எஸ். சேனநாயகா அரசுடன் ஒத்துழைக்க முன்வந்தார். வர்த்தக, வணிகத்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

இக் கட்டுரைத் தொடரில் நான் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டதை இச் சந்தர்ப்பத்திலும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். 1956-ம் ஆண்டில் தமிழர்கள் அடைந்துள்ள இழிவு நிலைக்குத் தானும் ஓர் காரணகர்த்தாவாக இருப்பதை நினைத்து வருந்துவதாக திரு. சுந்தரலிங்கம் 1956-ம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்திருந்தார் பிரதமர் அதிசௌரவ டி. எஸ். சேனநாயகாவைத்தான் முற்றாக நம்பி நடந்ததாகவும் எழுதியிருந்தார்.

பூரண சுதந்திரம் கேட்பதானால் எல்லா இனங்களும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாகக் கேட்டால்தான் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டதால் அந்த ஒற்றுமையைக்

**எஸ். எம். ஜி.**

காட்டுவதற்காகப் பூரண சுதந்திரக் கோரிக்கையில் சேர்ந்து கொள்ளும்படி டி. எஸ். சேனநாயக்கா கேட்டுக் கொண்டாராம். பிரதமரிடம் சில வாக்குறுதிகளைப் கேட்டுப் பெற்றுக்கொண்டபின்பே தமது சம்மதத்தைக் கொடுத்ததாக இப்போது வருந்துவதாகவும் திரு. சுந்தரலிங்கம் அக் கடிதத்தில் எழுதியிருந்தார். ஆனல் கோரிக்கைகள் என்னவென்பதையும் சுந்தரர் வெளியிடவில்லை.

வணிக, வர்த்தகத்துறை அமைச்சராகப் பதவிவகித்த மிகக் குறுகிய காலத்தில் பெரும் சாதனைகள் சிலவற்றைத் தமது அறுபதாவது வயதிலும் நிறைவேற்றிய சுந்தரர் இந்திய பாகிஸ்தானிய பிரஜா வுரிமை மசோதாவை டி. எஸ். சேனநாயகா உருவாக்கிய போது அதை எதிர்த்து அமைச்சரவைக்குள்ளேயே குழப்பம் செய்தார் இதனல் அமைச்சரவையிலிருந்து அவர் அகற்றப்பட்டார்.

இதன் பின் எதிர்க்கட்சியின் பின் ஆசன அங்கத்தவரான போதிலும் சுந்தரர் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தனது குரலை எழுப்புவதற்குத் தவறவில்லை.

### தேசியக் கொடிப் போராட்டம்

1951-ம் ஆண்டில் சிங்கக் கொடியைத் தேசியக்கொடியாக்க டி. எஸ். அரசாங்கம் தீர்மானித்த பொழுது சிறுபான்மையினருக்குத் தேசியக் கொடியில் உரிய இடம் வழங்கப்படவில்லையென்று அதை வன்மையாக எதிர்த்த சுந்தரர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக தமது கொள்கைக்கு மீண்டும் தமது மக்களின் சம்மதத்தைப் பெறுச் சபைக்கு வருவதாகவும் அறிவித்தார்.

இதன்படி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு அவர் சபைக்கு வராமலிருந்து தமது எம். பி. பதவியை இழந்தார்

இதனல் காலியான வவுனியாத் தொகுதி எம். பி. பதவிக்குப் புதிதாக உபதேர்தல் நடத்தப்பட்டது. இந்த உப தேர்தலில் போட்டியிட்ட சுந்தரர் மீண்டும் வவுனியாத் தொகுதி எம். பி. யாகப் பாராளுமன்றத்துக்குச் சென்றார்.

இச் சமயத்தில் தான் ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் சுந்தரரைப் பார்த்துச் சைகைமூலம் ''இன்னமும் சிங்கக்கொடி மேலே பறந்துகொண்டிருக்கிறது'' என்று காட்டிய பொழுது ''அதை இறக்கத்தான் நான் வந்திருக்கிறேன்'' என்று பதிலுக்குச் சைகைமூலம் காட்டினர்.

### மொழிப் பிரச்னையில் பகிஷ்கரிப்பு

1955-ம் ஆண்டில் சேர். ஜோன் கொத்தலாவல அரசாங்கம் மொழிப்பிரச்னை சம்பந்தமாக மேற்கொண்ட கொள்கையைச் சுந்தரர் எதிர்த்தார். தனது எதிர்ப்பைக் காட்டுமுகமாகச் சுந்தரர் தொடர்ச்சியாக மீண்டும் மூன்று மாதங்களுக்குப் பாராளுமன்றக் கூட்டங்களுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்தார்.

வவுனியாத் தொகுதி உப தேர்தல் 1956-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதின்மூன்றும் தேதி நடைபெற்றது. சுந்தரர் மீண்டும் அமோக வெற்றிபெற்றார். ஆனல் அவர் உப தேர்தலில் வெற்றிபெற்றுப் பாராளுமன்றம் செல்வதற்கு முன் 1956-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தலுக்குத் தேதி குறிப்பிடப்பட்டது.

1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ஆம், 7-ஆம், 10-ம் திகதிகளில் மூன்ருவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது.

இத் தேர்தலில் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிக்கட்சி பெருவெற்றியீட்டி ஆட்சிக்கு வந்தது மொழிப் பிரச்னையை முக்கியமாகவைத்து நடந்த இப்பொதுத் தேர்தல் நாட்டில் பெரும் கொந்தளிப்பான நிலையைத் தோற்றுவித்திருந்தது

சிங்களம் மட்டுமே உத்தியோக மொழி என்ற கொள்கையை பண்டாரநாயகா தலைமையிலான எம். ஈ. பியும் சேர் ஜோன் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் கடைப்பிடித்தன.

லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றின.

ஜி. ஜி. தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சிங்களத்துக்கும் தமிழுக்கும் நாடு முழுவதிலும் சம அந்தஸ்து இருக்கவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தது.

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து இருப்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தனி நிர்வாகமுள்ள சமஷ்டி ஆட்சி அமை


(10-ம் பக்கம் பார்க்க)

## வெற்றுச் சாக்கு விற்பனை

இச் சங்கத்தில் இருக்கும் வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன ரூபா 10/- மீளளிக்கப் படாத கட்டணமாகச் செலுத்திப் பெறும் கேள்விப் பத்திரங்களை, மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாகச் சங்கத்தில் ரூபா 100/- செலுத்தி, பதிவுத் தபால் மூலம் 15-08-85 க்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக்கான கேள்வி'' எனக்குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
கட்டைவேலி- நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
01-08-85, 4862




### பில்சைக்ஸின்

## இறுதி நாள்

கயிறுகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை அவர்கள் காட்டினர்கள். அதில் மிக நீளமான ஒரு கயிற்றை சைக்ஸ் தேர்ந்தெடுத்துக் கொண்டு வீட்டின் கூரை மீது ஏறினன்.

பழைய வீடென்பதால் கூரையின் எல்லா பகுதியும் பழுதடைந்து போயிருந்தது. சார்லிபேட்ஸ் அடைக்கப்பட்டிருந்த அறைக்கு மேலிருந்த கூரை மாத்திரம் ஓரளவு உறுதியாகவிருந்தது. சார்லி பேட்ஸ் ஏற்கனவே அந்த அறையின் ஜன்னல் வழியாக வெளியில் நின்ற மக்களை உஷார்படுத்திக் கொண்டிருந்தான். சைக்ஸ் பின்கதவால் ஓடிவிடக்கூடும் என்று அவன் எச்சரித்துக்கொண்டிருந்தான் அதேசமயம் பில் சைக்ஸ் கயிற்றின் உதவியுடன் கூரையின் மேல் தோன்றவே வெளியில் முன்பக்கமாக நின்ற பொது மக்கள் வீட்டின் பின்பக்கமும் சூழ்ந்து கொண்டார்கள் கொலைகாரன் மேலே நின்று பார்த்தான் அகழியில் அலையிருக்கவில்லை முழுவதும் சேருய்க் காணப்பட்டது.

சிறிது நேரம் மௌனமாய் இருந்த சனக்கூட்டம் திடீரென கூச்சலிட்டுச் கத்தத் தொடங்கியது முழுநகரமுமே அங்கு கூடிவந்துவிட்டதுபோல் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது.

பயம் மேலிடவே எப்படியும் கயிற்றைக்கொண்டு கீழே இறங்கி அகழியின் வழியாகத் தப்பிடவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது வீட்டின் புகைக்கூட்டைச் சுற்றி கயிற்றின் ஒரு நுனியைக்கட்டினன் மறுமுனையில் ஒருசுருக்கை [illegible] சுருக்கை இடுப்பில் போட்டு [illegible] குவதென்றும் கயிற நீளம் போதாத நிலையில் கயிற்றை அறுத்துவிட்டு கீழே குதித்துத் தப்பிவிடுவதென்றும் முடிவு செய்தான். அதன்படி சுருக்கை மெதுவாகக் கழுத்து வரைக்கும் இறக்கிக்கொண்டு சட்டைப்பையிலிருந்த கத்தியொன்றை வெளியில் எடுத்தான். கயிற்றின் மூலம் கீழே சென்றதும் அதனை அறுத்துவிட்டு கீழே குதிப்பதற்காக திடீரென ஏதோ அதிர்ச்சிக்குள்ளான பில்சைக்ஸ் ''ஐயோ, அதே கண்கள்!'' எனக்கூச்சலிட்டான்.

ஆம் அவனல் கொலை செய்யப்பட்ட நான்சியின் கண்கள் அவனை எப்பொழுதுமே துரத்திக் கொண்டிருந்தன. அந்தக் கண்களில் துளிர்த்த கடூரத்தையும் அவன் எப்பொழுதுமே மறந்ததில்லை.

கூச்சலிட்டவன் தன்னையறியாமலே தடுமாறிப்போய் மேலிருந்து நழுவி விழுந்தான். கழுத்தில் சுருக்குடன் முப்பதைந்து அடிகள் கீழே விழுந்தான் விழுந்த வேகத்தில் அவன் உடல் துடித்தது. அவ்வளவுதான் அங்கே அவன் உயிரற்ற சடலமானன். கையில் கத்தியுடன் அது கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

## நன்றிநவிலல்

தெய்வம்போல் எந்தவிதமான குறைகளும் இல்லாது எம்மைப் பேணிக்காத்த எம்தாயை இழந்த எமது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியும், இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டும், தேவையான பணிகளைத் தேவையான நேரத்தில் தாமாகவே முன்வந்து செய்தும், சபிண்டீகரண வைபவத்தின்பொழுது நேரில் சமூகமளித்துச் சிறப்பித்து அவர் தம் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்த எம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அன்பர்கள், மற்றும் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
5, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

கந்தர்மடம் பால்ய நண்பர்களால் தொகுத்தளிக்கப்பட்டது.

## நன்றிநவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

திருமதி
கனகபூசணம்
வேலுப்பிள்ளை



தோற்றம்:
27-01- 1913

மறைவு:
14- 07- 1985

திருமதி கனகபூசணம் வேலுப்பிள்ளை அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றி. அன்னரின் அந்தியேட்டிக் கிரியை 13-8-85 செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் அஸ்தி செல்வச்சந்நிதி தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். நண்பர்கள், உறவினர்கள் கலந்து, மேலும் வீட்டு சவண்டியிலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தம்பிமார், அக்கா, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உடுப்பிட்டி வீதி,
தொண்டமானுறு; 4941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுதந்திர அன்னை'க்கு வயது 100 ஆகிறது

அமெரிக்காவின் சுதந்திர அன்னைக்கு வயது ஒரு நூற்றுண்டை அடையப்போகிறது!

'The Statue of Liberty'

உலகில் சுதந்திரத்திற்கு ஒரு சம்பிரச் சின்னம் இருக்குமானுல் அது இந்த அமெரிக்க சுதந்திர அன்னையாகத்தான்



இருக்க முடியும் என்பதில் எதுவித ஆச்சரியமுமில்லை.

அமெரிக்காவின் சுதந்திரத்துக்காக பிரான்ஸ் அதனுடன் சேர்ந்து போராடி பிரிட்டனை வெற்றி பெற்றது இந்த வெற்றியை நினைவு கூரும் வகையிலேயே பிரான்ஸினுல் அமெரிக்காவுக்கு 150 அடி உயரமான இச்சிலை அன்பளிப்புச் செய்யப்பட்டது.

### பிரெஞ்சு அன்பளிப்பு

இந்தப் பிரெஞ்சு அன்பளிப்பு ஒரு சாதாரணமானதல்ல. காலஞ்செல்லச் செல்லவே இதன் மகிமை உலகெங்கிலும் பரந்து விரிவடைவதாக அமைந்துள்ளது.

## நூற்றுண்டு நிறைவில் அமெரிக்கா, பிரான்ஸுடன் யாழ்ப்பாணத்துக்கும் ஒரு நுண்ணிய உறவு!

1886-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 திகதி அமெரிக்க ஜனாதிபதி குரோவர் கிளீவ்லண்ட் (Grover Cleveland) நியூயோர்க்கடாவில் பெட்லோய்ஸ் தீவில் இந்த சுதந்திர அன்னையின் சிலையைத்திறந்து வைத்தார்.

இடதுகையில் அமெரிக்காவின் சுதந்திரதினமான 1776ம் ஆண்டு ஜூலை 4ந் திகதியைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றையும், வலது கையைத்தலைக்கு மேலே உயரப் பிடித்தபடி தீப மொன்றை ஏந்திய வாறும் இச்சிலை காணப்படுகின்றது.

### தஞ்சமும் தீபமும்

1892ம் ஆண்டு முதல் 1954ம் ஆண்டு வரை அமெரிக்காவில் இடம்பெற்ற ஐரோப்பியக் குடியேற்றங்களுக்குஇச்சிலையே வாயில் கோபுரமாக அமைந்தது.

இன்று அமெரிக்காவில் வாழும் மக்களில் அரைவாசிப் பேருக்குமதிகமானேரின் மூதாதையர்கள் இச்சிலையைக் கடந்தே அமெரிக்காவினுள் குடியேறினர்கள்.

**பா. அனந்தகிருஷ்ணன்**

"Give me your tired, your poor, your huddled masses yearning to breathe free"

"சுதந்திரக் காற்றை அனுபவிப்பதற்கான உங்கள் களைப்புற்ற, எளிமையான ஒருமித்த பிரார்த்தனையை என்னிடம் தாருங்கள்"

—என்ற வாசகம் இச்சிலையின் பீடத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

இந்த வாசகம் உலகில் புது வாழ்வு வாழத் துடிக்கும் திக்கற்ற மக்களைத் தன்னகத்தே இச்சிலை அழைப்பதாக அமைந்துள்ளது இதன் உயரப்பிடித்த வலக்கரத்தின் தீபம் அம் மக்களுக்கு வழி காட்டுவதாக விளங்குகின்றது.

### தளர்ச்சி

1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம 28ம்திகதி இச் சுதந்திரச் சிலை அதன் நூறுவது வயதைப் பூர்த்தி செய்யவுள்ளது

ஆயினும் இதன் இந்தநீண்டகால வாழ்வு இதில் சில தளர்வுகளையும் ஏற்படுத்தவே செய்துள்ளது. அமெரிக்க அரசாங்கம் உரிய வேளையில் இதனைக் கண்டுபிடித்தது.

இச் சிலையின் உட்புறப் பகுதியில் உள்ள சுமார் 1600 இரும்புக் கூடுகள் துருப் பிடித்துள்ளன.

இவற்றை அப்புறப் படுத்திப், பதிலாக உருக்கினுலான கம்பிகளைப் பொருத்துவதே புதிய திருத்த வேலைகளாகும். இது தவிர இச் சிலையின் மங்கிய, மற்றும் சிதைவுற்ற பகுதிகளையும் சீராக்குவது இவ் வேலைகளில் அடங்குகின்றன.

### நிதி சேகரிப்பு

சுதந்திர சிலையின் திருத்த வேலைகளுக்கென மிகவும் ஆர்வத்துடனும், அதே வேளை சுவாரஸ்யமான முறையிலும் அமெரிக்கர்கள் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

புளோரிடா (Florida) மாநிலத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 3000 மைல்கள் தூரத்தை மோட்டார் வண்டி [illegible] கடந்து குறிப்பிடத்தக்களவு பணத்தைச் சேர்த்தார்.

பென்சில்வேனியாவைச் சேர்ந்த உயர் பாடசாலையொன்றின் மாணவர்கள், 6 மீட்டர்கள் உயரமான சுதந்திரச் சிலையை உருவாக்கினர்கள். பின்னர் அதனை பென்சில்வேனியாவின் வீதிகள் வழியாகக் கொண்டு சென்று நிதி சேகரித்தார்கள்.

ஒரு பிரபல 'பியர்' (Bear) கம்பனிமிகவும் நீண்ட ஓட்டப் போட்டியொன்றை ஏற்பாடு செய்தது இதில்சுமார்இரண்டு லட்சம் பேர் கலந்து கொண்டனர்

இப்போட்டிக்கான அனுமதிக்கட்டணமாகப்பெறப்பட்ட நிதியை அக்கம்பனி திருத்த வேலைகளுக்கு வழங்கியது.

இத்திருத்த வேலைகளுக்கான செலவினம் 230 கோடி டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது

### பாரிஸிலிருந்து பாகம், பாகமாக வந்தது

சுதந்திர அன்னையின் புதுப்பொலிவுக்கான வேலைகள் துரிதமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இதனை உருவாக்கியவர்களையும், அமெரிக்காவுக்குஇது கொண்டுவரப்பட்ட முறையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

—எடோர்ட்டி லபௌலே ((Edouard de Laboulaye).

பிரெஞ்சு சட்டநிபுணரான இவரின் எண்ணத்திலேயே இச்சிலை முதலில் கருக்கொண்டது.

பார்த் ஒல்டி (Barth oldi) என்ற பிரெஞ்சுக்கலைஞர் இவ் எண்ணக் கருவை உயர்ந்த பெரும் வெண்கலச்சிலையாக வடித்தார்.

பாரிஸிலிருந்து சுமார் 200 மரப்பெட்டிகளில் பாகம். பாகமாக நியூயோர்க்கிற்குக் கப்பலில் இச்சிலை எடுத்து வரப்பட்டது.

இந்த ஆண்டு இச்சுதந்திர அன்னையின் சிலை இதன் 99-வது வயதில் பிரவேசிக்கின்றது அடுத்தாண்டு இதற்கு நூறு வயது பூர்த்தியாகின்றது.

இப்பூர்த்தியை அமெரிக்கர்கள் மட்டுமல்லாது இச்சிலையின் சிற்பிகளான பிரெஞ்சுக்காரர்களும் ஆவலோடு எதிர் பார்த்து நிற்கிறார்கள்.

தமது மாபெரும் நிர்மாணம் ஒன்று 100 வயதை எட்டுகின்றதென்ற பெருமை அவர்கள் மனதை நிறைத்து நிற்கின்றது.

இதேவேளை அமெரிக்காவிலிருந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள யாழ்ப்பாணத்தவராகிய எமக்கும் இச்சிலையுடன் ஒருசிறிய உறவு காணப்படுகின்றது! இது பலருக்கும் தெரியாதது.

### கிளீவ்லண்ட் மரங்கள்

சுதந்திர அன்னையின் சிலையைத் திறந்து வைத்த முதலாவது அமெரிக்கரான ஜனாதிபதி குரோவர் கிளீவ்லண்டின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துள்ளார்கள்.

கிளீவ்லண்டின் மைத்துனர் ஒரு கிறிஸ்தவப்பாதிரியாராவார். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பகால அதிபர்களின் ஒருவர்.

குரோவர் கிளீவ்லண்ட் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை வட்டுக்கோட்டையிலும் இவர் கொண்டாடினர்.

இதன் ஞாபகார்த்தமாக 'மலைவேம்பு' மரங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிச் சுற்றாடலில் அவர் நாட்டினர். இன்று அவை பெரும் விருட்சங்களாகக் காட்சி தருகின்றன.

ஆனால் அவற்றின் பெயர் 'கிளீவ்லண்ட்' மரங்கள் [Cleveland trees] என்பது ஒரு சிலருக்கே வதெரியும்!

- சுதந்திரச்சிலை!

- அதனைத்திறந்து வைத்த குரோவர் கிளீவ்லண்ட்!!

- அவர் ஞாபகார்த்தமாக வட்டுக்கோட்டை கிளீவ்லண்ட் மரங்கள்!!!

இப்பிணைப்பு சுதந்திரச்சிலையுடனுன யாழ்ப்பாணத்தின் நுண்ணிய உறவைத் தெளிவாகக் காட்டிநிற்கின்றது.

'நியூயோர்க்குடா'வில் சுதந்திரத்துக்காகவே நிலைத்து விட்ட அச்சிலையின் மகிமையை சுதந்திரத்தாகம் கொண்ட 'யாழ்குடா'விலும் பிரதிபலிக்கச் செய்வதாக இந்த உறவு அமைந்துள்ளது

# மனத் தரிசனங்கள்

அண்ணு,

உன்னை நாங்கள்
நாட்களாக-
வாரங்களாக-
மாதங்களாகத்
தேடிக் கொண்டிருக்கின்றோம்!

அண்ணு,

சைக்கிள் சத்தம் கேட்டால்
நீ தானே எனக்
கண்களைநீவியபடி பார்ப்போம்
பால் காரனே பேப்பர் காரனே
வருவான்...
ஏமாற்றத்தால் உளம் மடி
வோம்

அண்ணு,

நீ போகும் பொழுது
ஒன்றுமே சொல்லி விட்டுப்
போகவில்லை...
நீ வருவாய்
உனது சைக்கிள் அரவம்
வீதி முகப்பில் கேட்கும் என
அன்று உட்கார்ந்த அம்மா
இன்னும் அந்த இடத்தை
விட்டு
அசையவேயில்லை!
அவள் இருந்த கல்லில்
பள்ளம் விழுந்து விட்டது!
சில வேளைகளில்
அந்தப் பள்ளம்
அம்மாவின் கண்ணீரால்
நிறைந்து விடும்!

அக்காமாரின் பெருமூச்சால்-
அதன் வெப்பத்தால்-
அந்தப் பள்ளக் கண்ணீர்
வெள்ளம்
வற்றி விடும்!
ஆனாலும் அந்தப் பள்ளம்
நெடுகலும்
நிறைகிறது அண்ணு!

'சாப்பிட்டிட்டுப் போ தம்பி'
என
அம்மா சொன்னதற்கு நீ
'இப்ப வந்திடுறன்'
எனக்
கத்தி விட்டுப் போனுய்!
போனனி... போனது தான்...

கண் மூடி
அதன் இடைவெளியால்
வழியும் கண்ணீரால்
உதடு நனைய
அம்மா சொல்லிக் கொண்டே
இருக்கிறுள்
'தம்பி... சாப்பிட்டிட்டுப் போ'
என்று!

அண்ணு,
வீட்டுக்குள் பானையில் போட்
டிருக்கும்
அரிசி புழுப் பிடித்து
அடுப்பில்
பூனை குட்டி போட்டிருக்கிறது
பெருமூச்சுக்களால்
எங்கள் வயிறுகள்
வற்றிக் கொண்டே போகின்
றன!

இங்கே எங்கள்
வீட்டு மூலையில்
மச்சாள் இருந்து கொண்டு
முகட்டையே
வெறித்துக் கொண்டிருக்கிறுள்
உனது இதயத்தை மச்சாளிடம்
பறி கொடுத்ததால் தானே
இதய மில்லாமல் நீ
எங்களை விட்டுச் சென்ருய்?!

அண்ணு,
எனக்குத் தெரியும்
நீ வரமாட்டாய்!
வேண்டாம்... நீ வர வேண்
டாம்...

ஒரு தரம்
ஒரே ஒரு தரம்
உனது சைக்கிள் சத்தத்தை
யாவது
எங்கள் தெரு முனையில்
காட்டிவிட்டுப் போ!

—மோகன[illegible]

# நியூஸ்—.

- நூறு ஆண்டுகளுக்கு மேல் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள்: உதயதாரகை, சத்தியவேதபாதுகாவலன், இந்துசாதனம்.
- ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பத்திரிகை, சஞ்சிகைகள்: கமத்தொழில் விளக்கம், தினகரன், வீரகேசரி.
- 40 வயதுடைய பத்திரிகை, சஞ்சிகைகள்: சிவதொண்டன், ஐக்கியதீபம்.
- வெள்ளிவிழா கண்ட பத்திரிகை: ஈழநாடு.
- அதிக இதழ்களை வெளியிடும் சஞ்சிகைகள்: சிரித்திரன், மல்லிகை
- வியாபார நிறுவன சஞ்சிகை: மில்க்வைற் செய்தி.
- அதிக பத்திரிகை, சஞ்சிகையின் ஆசிரியர் தி. ச. வரதராஜன் (வரதர்).
- ஜோதிடப் பத்திரிகையாகத் தொடர்ந்து வெளிவருபவை: சோதிடமலர், சோதிடபாலினி, ஜோதிடயர்
- தேக்கமில்லாமல் வெளிவரும் சஞ்சிகைகள்: களம், மாற்று, சக்தி, அலை, நான், ஊற்று.

— சச்சி

# சமயச் சண்டை

இது மனிதனின் சிற்றியல்பைக் காட்டுவதாகும். ஏதாவது ஒன்றுக்குச் சண்டை போட்டுப்பழகியவன் வேறு விடயமில்லாதபோது சமயச் சண்டையில் அக்கறை காட்டுகின்றுன்.

நம்மவர்கள் முன்னஜனனுடனும் புத்தனுடனும் சண்டை போட்டார்கள். இப்போ இவர்கள் கிடைக்கவில்லை. இங்கேயே உள்ள சைவன் வைணவன் எனப் பிரிந்து சண்டை போடுகின்றனர். அதுமட்டுமன்றி சைவர்களுக்கு உள்ளே அரைடஜன் பிரிவினைவாதிகளும் வந்து விட்டனர்

மோட்சம் போகவேண்டுமென்றுல் ஒவ்வொருவனும் என்னுடைய வழியில்போனுல் உண்டு; இல்லையென்றுல் தொலைந்தாய் என்பான்

இது நம்மவர்களுக்கு மட்டுந்தான் என்றில்லை

கத்தோலிக்கர் நரகம் என்றுல் புரொட்டஸ்டன்டுகளுக்குரியது என்பர். புரொட்டஸ்டன்டுகளோ அது கத்தோலிக்கர்களுக்கு உரியது என நம்புகின்றுர்கள்.

சமய வாழ்வு தாழ்ந்து சமயவாதம் உச்சமடைவதாலேயே சமயப் போர்கள் உண்டாகின்றன.

அ. ச. ஞா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜராஜசோழப் பேரரசன் -7

சுந்தரசோழன் இறந்ததும் அவனுடைய மூத்த மைந்தன், இளவரசனாயிருந்த ஆதித்த கரிகாலனே அரசனாக வேண்டியவன். ஆனால் ஆதித்தன் அந்தரங்கமான முறையில் இறந்து போனதால், சுந்தரசோழனின் இரண்டாம் மைந்தன் அருள்மொழித்தேவனுக்கே அரசுரிமை கிடைத்தல் வேண்டும்.

ஆனால் முன்னர் கண்டராதித்தர் ஆண்டபின், அவரின் மைந்தனை மதுராந்தகன் சிறுபிள்ளையாயிருந்தமையால், ஆட்சிப் பொறுப்பு கண்டராதித்தரின் தம்பியார் அரிஞ்சன் மேலாயது. அரிஞ்சனுக்குப் பிறகு அவனுடைய மைந்தன் சுந்தரசோழன் அரசுரிமை பெற்ற வேளையிலும் மதுராந்தகன் பராயமடையாதவனாயே வாழ்ந்தான்.

பின்னர் சுந்தரசோழனின் ஆட்சிக்கால இறுதியில் மதுராந்தகன் வளர்ந்து தக்க வயதடைந்து தனக்கே ஆட்சியுரிமை கிடைத்தல் வேண்டும் என்று தன் அபிலாசையைத் தெரிவித்தான்.

இவ்வாறாக சுந்தரசோழனின் மூத்த மைந்தன் இளவரசன் ஆதித்தகரிகாலன் அந்தரங்கமான முறையிலே கொலையுண்டமையால், ஆளும் உரிமை சுந்தரசோழனின் இரண்டாம் மைந்தன் அருள்மொழித்தேவனுக்கே உரியது என்று நாட்டில் உள்ள பெரியவர்கள் பலர் ஒரே குரலில் தீர்மானித்தார்கள்.

இந்நிலையில் அருள்மொழித்தேவன் வெகுவாகச் சிந்தித்தான். தன் தந்தை சுந்தரசோழன் இறக்கத் தன் தாய் உடன் கட்டையேறி உயிர் விடத் தான் தனித்திருந்த போது, தன்னைத் தூக்கி வளர்த்து ஆளாக்கிய தன் அருமைப் பெரியபாட்டி, கண்டராதித்தரின் கற்புடைப் பெருந்தேவி, செம்பியன்மாதேவியார் பெற்றெடுத்த மதுராந்தகன் என்னும் தன் சிற்றப்பனுடன் அரசுரிமைக்காகப் போட்டியிடுதல் அறநெறியாகாது. இவ்வாறு தெளிந்து தன் ஆதரவாளராயிருந்த பெருமக்களுக்கு நன்றி கூறித் தன்னுரிமையைப் புறக்கணித்து, மதுராந்தகனே அரசனாதல் வேண்டும் என உறுதி கூறி விட்டுக் கொடுத்தான், விசால மனம் கொண்ட வீர இளைஞன்.

''மதுராந்தகனுக்கு அரசில் மனமிருக்கும் வரை நான் அரசாள்வதற்கு நினைக்கவும்மாட்டேன்'' என்று கூறிய அருள்மொழித்தேவன் அன்றைய அரசியல் சிக்கலைத் தீர்த்து வைப்பதில் தாராள மனப்பான்மையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் உடையவனாய் இருந்தான். ஆனால் ஒரு நிபந்தனையையும் அவன் விதித்தான்.

மதுராந்தகன் முடி சூடும் போதே, தனக்கு இளவரசுப் பட்டம் கட்டுதல் வேண்டும். மதுராந்தகனுக்குப் பின், சோழநாட்டு ஆட்சியுரிமை தனக்கே கிடைத்தல் வேண்டும் இதைக் கேட்டதும் அருள்மொழியின் ஆதரவாளர்கள் அவன் கொண்ட முடிபு அறந் தழுவியது எனக்கண்டு மதுராந்தகனுக்கு முடி சூடியதோடு அருள்மொழிக்கும் இளவரசுப் பட்டம் கட்டினர். மதுராந்தகனின் விருப்பமும் உரிமையும் நிறைவேறின. இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த உடன்படிக்கைக்கு மனமுவந்து ஒப்புக்கொண்ட மதுராந்தகன் 970ஆம் ஆண்டிலே முடிசூடிக் கொண்டான். அன்றே அருள்மொழித்தேவனும் இளவரசனாயினான். அறநெறி பிறழா அரசு தழைத்தது நாடு செழித்தது. நன்மை விளைந்தது.

பதினான்கு ஆண்டுகள் தம்பி பரதனுக்கு ஆளும் உரிமையை விட்டுக்கொடுத்த இராமனைப் போல, அருள்மொழித்தேவனும் பதினைந்தாண்டுகள் தன் சிற்றப்பனுக்கு ஆளும் உரிமையை விட்டுக்கொடுத்தான்.

அருள்மொழித் தேவனையும் மதுராந்தகனையும் வித்தியாசம் பாராட்டாது வளர்த்தெடுத்த பெருந்தேவி, பெண்கள் திலகம், செம்பியன் மாதேவி இந் நிகழ்ச்சியைக் கண்டு வெகுவாக மனங்குளிர்ந்து இருவரையும் வாழ்த்திப் பரந்தஅளவில் கடவுட் பணிபுரிந்து வந்தார்.

## உத்தம சோழன்

அருள்மொழித்தேவன் இளவரசனாயிருந்து அருஞ்சேவை செய்தபோது மதுராந்தகன் அன்பு, அருள், அறம் பிறழாமல் அரிய முறையில் செங்கோல் செலுத்திய செம்மை வைக்கண்ட சோழநாட்டவர் எல்லோரும் மதுராந்தகனை உத்தமசோழன் என வாயார வாழ்த்தினர். அப்பெயரே அவனுடையவரலாற்றுப்பெயராய் நிலைப்பதாயிற்று. வரலாற்றேடு, கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலானவற்றிலும் உத்தமசோழன் என்னும் பெயரே எங்கும் வழங்குவதாயிற்று பரகேசரி உத்தம சோழன் என்பதே அவனின் பட்டப்பெயராகும்.

உத்தம சோழனின் ஆட்சிக் காலத்தில் சோழநாடு பெருஞ் சிறப்படைந்த செய்தி கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் அறியக் கிடக்கின்றது. அவன் காலத்துக் கல்வெட்டுக்களில் சில இடங்களில் வடமொழியில் முன்னுரைகள் காணக்கிடப்பதால் அக்காலத்தில் வடமொழியும் நன்கு பேணப்பெற்றிருந்தமை தெளிவாகிறது. கல்வெட்டுகளில் சில இடங்களில் பரகேசரி கொடுத்தவை என்றும், சில இடங்களில் பரகேசரி உத்தமசோழன் கொடுத்தவை எனவும், பொறிக்கப் பெற்றுள்ளன. பரகேசரி என வரும் இடங்கள் அவனையே குறிப்பன என்பதற்குக் காலமும் அவன் உறவினர் பெயர்களும் ஆதாரமாயுள்ளன.

சோழர் தம் பெருமை பேசும் பொற்காசுகளின் காலத்தால் பழைமை வாய்ந்தவை உத்தமசோழன் காசுகளேயாம். இணைமீன்களை நோக்கியவாறு குந்தியிருக்கும் புலியின் கோலமும், உத்தமசோழன் என்னும் பெயரும் பொறிக்கப் பெற்ற பொற்காசின் நிறை அறுபது குன்றிமணியாகும்.

சென்னையிலுள்ள நூதனசாலையை அலங்கரிக்கும் தட்டுகள் உத்தம சோழனின் ஆட்சிக் காலத்து அரசியல், சமூகநிலைமைகளை அறிவதற்குத் துணையாயுள்ளன என்பர்.

க.சி.குலரத்தினம்

உத்தமசோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் அதாவது 982ஆம் ஆண்டளவில் வெளியானதும், பின்னர் திருச்சிறுப்பள்ளியிற் கண்டெடுக்கப் பெற்றதுமான கல்வெட்டில் அவனுடைய அரசியல் உயர் அதிகாரியாயிருந்த அம்பலவன் புலிவூர் நக்கன் என்பவனைப் பற்றி வருகின்ற செய்தி பெருமை வாய்ந்தது. பெருந்தரம் வாய்ந்த அதிகாரியான அவன் விஜயமங்கலத் திருக்கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்தான் என்பர். அக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை முன்னர் அப்பர் பாடியருளியபோது. அவரே அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்தருளியவர் என்பர். அதிகாரி அம்பலவன் புலுவூர் நக்கன் அத்திருக்கோயிலுக்கு நெடுவாயில் என்னும் ஊரையும் நூறுகழஞ்சுபொன்னையும் கொடுத்திருந்தான்.

உத்தமசோழனுக்கு விக்கிரமன் என்னும் பெயரும் வழங்கியதாகத் தெரிகிறது அவனுடைய மனைவியர் வரிசையில் பட்டத்தரசியாக நம்பிராட்டி என்னும் திரிபுவனமாதேவியார், பட்டனதானதொங்கி, மழபாடி தென்னவன்மாதேவி, இருக்கோளர்மகள் வானவன் மாதேவி, விருப்பரையன்மகள் கிழானடிகள், பழுவேட்டரையன் மகள் பஞ்சவன்மாதேவி, சொன்னமாதெவி, ஆரூரன் அம்பலத்தடிகள் முதலானோரின் பெயர்கள் உள்ளன. இவர்கள் அத்தனைபேரும் தங்கள் மாமியாரான செம்பியன் மாதேவியாரைத் தெய்வம் எனப் போற்றியதோடு, மாதேவியாரின் கடவுட்பணிகளுக்கும் இவர்கள் கைநிறைய அளிக்கொடுத்துச் சைவம் வளர்த்த தையல்களாயிருந்தனர்.

உத்தமசோழனுக்கு ஒரேயொரு மைந்தன் இருந்தான். அவனுக்கு மதுராந்தகன் கண்டாதுத்தியன் எனப் பெயரிட்டுச் சைவச் சூழலில் நன்றாக வளர்த்துத் திருப்பணி அலுவல்களில் பழக்கிவந்தான். இங்ஙனம் பழக்கியதால் அவன் பிற்காலத்தில் அருள்மொழித்தேவனின் கோயிற்பணிகளிலும் அரச காரியங்களிலும் அன்புடன் பணிசெய்ய வல்லவனானான்.

உத்தமசோழனின் உயர் அதிகாரியாய அம்பலவனும் அரசன் கட்டளைப்படி அருள்மொழித்தேவனுக்கு ஆட்பட்டுப் பணிபுரிய ஆயத்தமாயிருந்தான். உத்தமசோழன் பரகேசரி என்னும் பட்டத்துடன் பதினைந்தாண்டு அரசபரிபாலனம் செய்து 985ஆம் ஆண்டில் இறந்தான்.

உத்தமசோழனின் கல்வெட்டுக்கள் திருமுல்லைவாயில், காஞ்சிபுரம், திருவொற்றியூர், திருவடந்தை, மீச்சூர், பழங்கோயில், திருமாற்புறம், திருவதிகை முதலான இடங்களிற் காணப்படுகின்றன என்பர். இக்கல்வெட்டுக்கள் உத்தமசோழனின் தாயார் செம்பியன் மாதேவியார் செய்த அறக்கொடைகளையும், அவனுடைய தேவிமார் செய்த உபகாரிப்புக்களையும், அரசியல் அலுவலாளர் அறங்களையும் விளக்கிக் கூறுகின்றன. இவை யாவும் உத்தமசோழனின் ஆட்சிக்காலத்து அரசியல் முறை, பொருளாதார மேம்பாடு. பொதுமக்கள் ஒழுக்க நெறி முதலான செய்திகளைக் கூறுவனவாய் சென்னை நூதனசாலையை அலங்கரிக்கின்றன.

உத்தமசோழன் தனது அரசியல் அதிகாரியாயஅம்பலவன் நக்கனுக்கு விக்கிரம சோழமராயன் என்னும் பட்டம் வழங்கியுள்ளதால், அரசனுக்கு விக்கிரமன் என்னும் பெயர் இருந்தமை தெளிவாகிறது முன்னர் மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிய மன்னனிடம் தென்னவன் பிரமராயன் என்னும் அருள் நிறைந்த பட்டம் பெற்றமை நினைவிற் கொள்ளத்தக்கது.

[வளரும்]

### யாருக்கு நல்லுணர்வு?

இளைய சமுதாயம் நல்ல உணர்வுடையதாக்கப்பட வேண்டும் என்று சொல்லிச்சொல்லிப் பலர் தாம் நல்லுணர்வுடன் வாழ்வதினின்றும் விலகிவிடுகின்றனர்.

- ஓர் அறிஞர்

## கர்ப்பிணித்தாய்மாருக்கு ஒரு வழிகாட்டி

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 50 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பெப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பெப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 0 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 1/ | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச் |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 2 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 0 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பெப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பெப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச் |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| யூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | யூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்ட் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்ட் |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஜூன் |
| செப்ரம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்ரம்பர் |
| யூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| யூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்ட் |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்ட் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்ரம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்ரம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

இவ் அட்டவணை மூலம் பெண்கள் தமக்கு மகப் பேற்றுக்கான திகதியை அறிந்து கொள்ள முடியும். சில பெண்கள் தமக்குச் சரியான திகதியை அறியாமல் முன்கூட்டியே ஆஸ்பத்திரிக்குச் சென்று விடுகின்றனர். இவ்வட்டவணை மூலம் திகதியை அறிந்து வைத்திருந்தால் உரிய காலத்தில் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம் இங்கு தரப்பட்ட அட்டவணையைக் கவனியுங்கள், மேலும் கீழுமாகத் திகதி எண்கள் தரப்பட்டுள்ளன. இதில்உள்ள மேல்திகதி கர்ப்பம் தரிக்கும் காலத்தையும், அதன் கீழ் உள்ள திகதி குழந்தை பிறக்கும் காலத்தையும் குறிக்கும். கர்ப்பகாலம் 271 நாட்களை அடிப்படையாக கொண்டு இவ்வட்டவணை கணிக்கப்பட்டது. ஒவ்வொரு கர்ப்பிணித்தாயும் வைத்திய ஆலோசனைப்படி தமது கர்ப்பதிகதியை அறிந்து கொள்ளலாம்.

● உதவியவர்: [illegible] சச்சிதானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# மலர் தாவும் வண்டுகள்

திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்



"என்னக்கா இன்றைக்கு வீடுசும்மா கலக்கி எறியுது. உன்னைத் திருமணஞ்செய்ய இருக்கும் உன் காதலர் இன்று வீட்டுக்கு வருகிறாரோ" என்று கேட்டபடி குசினிக்குள் நுழைந்தாள், காஞ்சனாவின் சகோதரி சோபனா. குசினிக்குள் விதம் விதமான பலகாரங்கள் செய்வதில் நேரத்தைச் செலவிட்டுக்கொண்டிருக்கும் காஞ்சனாவுக்கு அவளது மற்றைய இருசகோதரிகளான மோகனாவும் ஜமுனாவும் உதவிகள் செய்துகொண்டிருந்தனர்.

தந்தையின் மரணத்துடன் கானல்நீர் போலச் சூனியமாகி விட்டதென்று எண்ணிய தங்கள் வாழ்க்கையில் இந்தத் திருமணத்தோடு வசந்தகாலம் வீசப்போகிறது என்ற நம்பிக்கை சகோதரிகள் மூவரினதும் மனத்தில் துளிர்விட்டிருந்தது.

"ஓம் சோபனா, இன்றைக்கு வீட்டுக்கு வாறனென்றவர். ஏதோ நாங்கள் ஏலக்கூடிய வரை எங்களது அன்பையும் பெருந்தன்மையையும் காட்டினால் நல்லதுதானே. அவரும் சந்தோஷப்படுவார்" என்ற காஞ்சனா "நான் இன்று லீவு போட்டுவிட்டுத்தான் வந்தனான். இன்றைக்கு முதல் முதல் வீட்டுக்குவரும்போது அவருக்குப் பிடிக்கிற மாதிரித்தானே நடக்கவேணும்" என்று சொல்லிமுடித்தாள்.

"சங்கர் ஒரு புடவைக்கடை முதலாளி அவன் ஒரு பட்டதாரியாக இருந்தாலும் உத்தியோகம் பார்ப்பதில் அவ்வளவு ஈடுபாடு இருக்கவில்லை பெரிய புடவைக்கடை முதலாளியின் ஒரேமகனான சங்கருக்கு ஏராளமான சொத்துப்பத்துக்கள் இருந்தன! அவனைப்பொறுத்தவரை அவனது படிப்பு அறிவுக்குமட்டுமே ஒழிய உத்தியோகத்துக்காகவல்ல.

புடவைக்கடையில் வியாபாரத்துக்காகக் கைத்தறி நெசவுச்சேலைகள் தேவைப்படுவதுண்டு. அவன் தனக்குத் தேவையான நெசவுசேலைகளை காஞ்சனாவின் நெசவுசென்ரரில் இருந்தே எடுத்துக்கொள்வான்.

அவளது வேல்போன்ற நயனங்களும் செழுமையான கன்னங்களும், தாமரைமலர் போன்ற முகமும் பார்ப்பவரை ஈர்த்துக்கொள்ளவல்லன. சித்திரப்பதுமைபோன்ற அவளைக்கண்டால் சந்நியாசிக்குக் கூடச் சம்சாரி ஆகிற எண்ணம் வருமென்றால் சங்கர் அவளைக்கண்டு மயங்கியதில் வியப்பில்லை.

காஞ்சனாவைக்கண்டு இது பற்றிக் கேட்டது கிடையாது. ஆனால் ஏதோ சாட்டுச்சொல்லிக்கொண்டு அடிக்கடி நெசவு சாலைக்கு வந்து போனான். ஆனால் காஞ்சனாவின் நண்பி சுகந்தியைச் சந்தித்துக் காஞ்சனாவைத் தனக்குத் திருமணம் செய்வதற்கு விருப்பமுண்டு என்றும், அவளது விருப்பத்தைக் கேட்டுச்சொல்லும்படியும் கேட்டுக்கொண்டான்.

சுகந்தி காஞ்சனாவைச் சந்தித்தபோதுதான் சங்கரின் இந்தவிருப்பத்தை அவளிடம் தெரிவித்து இருக்கிறாள் குடும்ப கஷ்டத்தால் நீயும், உன் சகோதரிகளும் எத்தனை நாளைக்கென்று உங்கள் திருமண ஆசைகளை அவித்து விட்டுச் சும்மா இருப்பது? பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண்கொடுப்பது போல உனக்குக் கடவுளருளால் திருமண வாழ்க்கை கிடைக்கப் போகுது போல இருக்கு என்ற சுகந்தி. சொல்லி வாய்மூடுவதற்குள்.

"சுகந்தி, உந்தப் பருப்பு மட்டும் என்னிடம் அவியாது. நானும் என்ரை கஷ்டமும் அப்பனில்லாத மூன்று சகோதரிகளையும் நடுத்தெருவில் விடுப்போக நான் தயாரில்லை.

அது மட்டுமல்ல ஆண்கள் பட்டாம்பூச்சிகள். மலருக்கு மலர் தாவும் சுபாவம் கொண்டவர்கள். நானே ஏமாறத் தயாரில்லை" என்று ஒரேயடியாகச் சொல்லிமுடித்தாள் காஞ்சனா.

"என்ன காஞ்சனா யோசித்துக் கதை. தேடிவந்த செல்வத்தைக் காலால் உதைக்காதே. உன் நல்வாழ்வில் அக்கறை கொண்டவள் நான் என்பது உனக்குத் தெரியும். நீ கெட்டுப்போக எதையும் செய்யமாட்டேன் என்பதை நம்ப வேண்டும்."

"இதென்ன சுகந்தி, சண்டிக் காய்க்கை சனியன் புகுந்த மாதிரி என் குடும்பநிலை தெரிந்தும் என்னைக் கஷ்டப் படுத்துகிறாய். உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாவது கிடையாது சுகந்தி. நான் அதிர்ஷ்டம் உள்ளவள் என்றால் அப்பா உயிரோடு இருந்திருப்பாரே நான் ஊர்க்குருவி சுகந்தி பருந்தாக முடியாது. எனக்கு வீண் கரைச்சல்படவிருப்பமில்லை" என்றாள். காஞ்சனா அவளது கண்கள் சிவந்தன. சொற்களிற் கடுமை தொனித்தது.

சுகந்தி விட்டுக்கொடுக்காதவளாய் மீண்டும் சொன்னாள்.

"காஞ்சனா, திருமணப் பருவத்தின் நுழைவாயிலில் உன்னுடன், நான்குபேர் இருப்பதை மறந்துவிடாதே. பொறுப்புப் பொறுப்பென்று நீயும் இருந்து கடைசியில் உன்போல உன் சகோதரிகளையும் வாளாவெட்டிகளாக்கப் போகிறாய். சங்கரை நீ திருமணம் செய்துகொண்டால், உன்ரை பொறுப்புக்கள் நீங்கவும் அவன் உதவிசெய்வான். நீயோ, கட்டுப்பெட்டி போல வீட்டுக்குள் இருந்தால் உன் சகோதரிகளும் இருக்க வேண்டியதுதான்.

சுகந்தி; "எந்த விசரிதானும் இதைத் தட்டிக்கழிப்பாளோ? உன்னைப்போல பைத்தியம் அங்கொடையில் தானும் இருக்காது காஞ்சனா. நீ ஓமென்று சொல்லாவிட்டால் உன்விதியென்று தான் நினைக்கவேணும், ஆனால் நீ உப்படிக் கஷ்டப்படுகிறதை என்னால் சகிக்கமுடியவில்லை.

காஞ்சனா: சுகந்தி நீ என்னைக் கஷ்டப்படுத்துகிறாய். இப்படிக் கஷ்டப்படுகிறதை விட எமலோகம் போனால் சுகம் போலத் தெரியுது. எப்படிப் போவதென்றுதான் தெரியவில்லை."

"துணிந்துவிட்டால் எமலோகம் காலடியில்" என்று கிண்டல் செய்தாள் சுகந்தி.

"ஆண்களைப்பற்றி உனக்குத் தெரியாது சுகந்தி. முதலில் கொல்லைக்காட்டு நரி போலப் பல்லைக்காட்டிக் கெஞ்சிக்கொண்டு வருவார்கள், இரைஅகப்பட்ட உடனே சீதனம் தா என்று கேட்பார்கள் சீதனம் இல்லாவிட்டால் வேறொருத்தியைக் கைப்பிடிப்பார்கள்.

இதுதான் சுகந்தி. ஆண்கள்! சீதனத்துக்கே வழியற்ற எனக்கு ஏன் கல்யாண ஆசை? நீ என்னை வற்புறுத்துவது எனக்குப் பிடிக்கவே இல்லைச் சுகந்தி"

"சங்கருக்கு இருக்கும் சொத்துப்பத்துக்கு உன்ரை சீதனம் தான் அவருக்குத் தேவைப்படுகுதாம். அவன் சீதனம் பற்றியே என்னிடம் பேச்செடுக்கவில்லை. உன்னை மட்டுமே என்னிடம் கேட்டான்" என்று சுகந்தி கூறிய போது-

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நெகிழும் என்பது போல காஞ்சனாவின் நெஞ்சத்திலும் ஒரு நெகிழ்வு:

"உன்னுடன் எதிர்த்துப் பேச எனக்கோ முடியவில்லைச் சுகந்தி என்நன்மையும் தீமையும் எல்லாம் நீ அறிந்தது தானே. வீட்டுக்குஒரே பிள்ளை என்பதாலோ, சொத்துப்பத்துக்கு அதிபதி என்பதாலோ, அவர் என்னை விரும்புகிறார் என்பதாலோ நான் ஓம் என்று சொல்லவில்லை உன்னை நம்பியே ஓம் என்று சொல்லமென நினைக்கிறேன்" என்று காஞ்சனா சொன்னபோது அவளது மனத்தில் நம்பிக்கை துளிர்விட்டிருந்தது.

காஞ்சனா, முள்ளில் சேலை பட்டால் முள்ளுக்கு நட்டமில்லை. சேலை தான் கிழிந்து விடும் என்பது நானறியாததல்ல ஆண்கள் சேறுகண்ட இடத்தில் மிதித்துத் தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவார்கள் என்பார்கள். ஆனால் சங்கர் அருமையானவன். இன்று நீ சம்மதம் தெரிவித்தால் உன்வாழ்வு தளிர்த்து விடும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு அதனால் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் காஞ்சனா" என்று ஒரு பிரசங்கம் செய்து முடித்தவள் [illegible] தாள் சுகந்தி, அவளுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டோம் என்ற பெருமையும் திருப்தியும்.

இப்பொழுதெல்லாம் காஞ்சனாவும் சங்கரும் அடிக்கடி சந்தித்துக் கொள்கிறார்கள், இன்று சங்கர் வீட்டுக்கே வரத் துணிந்து விட்டான.

பிற்பகல இரண்டு மணியிருக்கும் நீலநிறபென்ஸ் கார் ஒன்று காஞ்சனாவின் வீட்டு வாசலில் நின்றிருந்தது. அதிலிருந்து இறங்கிய சங்கரை வாயெல்லாம் பல்லாக வரவேற்றனர் காஞ்சனாவும் அவளது தங்கைமாரும்.

வந்து இருந்ததும் இராதது மாக "காஞ்சனா இவர்கள் மூவரும் உங்கள் தங்கைமாரா?" என்று கேட்டான். நல்ல அழகான பெரிய வீடு. எல்லாம் உனக்குத் தானே" என்று பகிடி மாதிரிக்கேட்டு வைத்தான்.

"இல்லை சங்கர் எங்களில் கடைக்குட்டிக்கே இந்த வீடு. அப்பாவை இழந்த நிலையில் மூவரும்இருக்கும்போது நான் எப்படி வீட்டை எடுக்க முடியும்? இந்த வீடு அப்பா வியாபாரஞ் செய்தபோது கட்டப்பட்டது. இப்படிப் பெரிய வீடு கட்டவும், தளபாடங்கள் போடவும் எங்களால் ஏலாது தானே அம்மாவும் படுத்த படுக்கையாகி விட்டா. நான் தப்பிக்கொண்டால் தங்கைகளையும் நல்ல இடங்களில் திருமணம் செய்து கொடுக்கலாம்" என்று தன் கதையையே சொல்லி முடித்தாள் காஞ்சனா.

"அப்பா இல்லாத பிள்ளைகள் என்றால் மூவரும் உனக்கா பொறுப்பு? உனக்குத் தலை நரைத்தாலும் உன் பொறுப்பு நீங்காது" என்று சங்கர் சொன்னபோது முகம் மாற்றமடைந்திருப்பதைக் காஞ்சனா கவனிக்கவில்லை.

"பின்னை யார் பார்க்கிறது சங்கர்? நான்தான் பார்க்கவேணும் முன்பு நான் திருமணம் செய்யிறஎண்ணத்தோடு இருக்கவில்லை. சுகந்தி என்னை வற்புறுத்தியதாலேயே நான் ஓமென்றனான்" என்று அழாக்குறையாகக் கூறிய காஞ்சனாவை இடைமறித்து, "உன்ரை கஷ்ட நஷ்டங்களைக் கூறினாய் அல்லாமல் சுகந்தியைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே. அவள் எப்படி இருக்கிறாள் சொல்லேன்" என்று காஞ்சனா கொடுத்த லட்டைக் கடித்துச் சுவைத்தபடி கேட்டான் சங்கர்.

"சுகந்தியின்ரை அப்பா வெளிநாட்டில் இருக்கிறார். அவள் குடும்பத்தில் ஒரே பிள்ளை" என்று காஞ்சனா சொல்லி முடிப்பதற்குள் "சுகந்தியின் வீடு பெரிய வீடா?" என்றான் சங்கர்.

"ஓம் சங்கர், மாடி வீடு. பார்க்கவும் அழகுதான். ஆனால் இத்தனை இருந்தும் அவள் பத்தரை மாற்றுத் தங்கம் தான்" என்று அவளது நல்ல குணத்தையும் சேர்த்துச் சொல்லிவைத்தாள் காஞ்சனா.

எப்பொழுதும் காஞ்சனாவுடன் அதிகமாகக் கதைக்க விரும்பும் சங்கர் அன்று அவசரம் அவசரமாக வெளிக்கிட்டது காஞ்சனாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. என்றாலும் ஏதோ அவசர அலுவலாக்கும் என்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"காஞ்சனா, போய் விட்டு வரட்டுமா" என்ற சங்கரை வழியனுப்பிவைத்தாள் காஞ்சனா.

தங்கள் வீட்டுக் கேற்றைத் திறந்துகொண்டு வாசலுக்கு வந்த சுகந்தி "வாங்கோ சங்கர் காஞ்சனா வீட்டுக்குப் போனீர்களா? கல்யாணத் திகதி குறித்தீர்களா?" என்று ஆவலுடன் விசாரித்தாள்.

பென்ஸ் காரில் நின்று இறங்கிய சங்கர் "போனனான் சுகந்தி, என்னைப் பொறுத்தவரை என் இலட்சியங்களைப் பொறுத்தவரை காஞ்சனாவிடத்தில் நான் ஏமாந்துதான் போய்விட்டேன்".

"ஏன்? ஏன், காஞ்சனா வேண்டாம் என்று சொல்லிவிட்டாளா?நடந்தது என்ன?" என்று பதற்றப்பட்டாள் சுகந்தி.

"இல்லை சுகந்தி, காஞ்சனா வீட்டுப் பொறுப்புகள் கூடுதலாக உள்ள பெண். தங்கைமார் மூவர் தந்தை இல்லை. அந்தக் குடும்பத்துக்குள்ளே போனால் காலம் முழுவதும் கஷ்டப்படத்தான் வேணும். அது மட்டுமல்ல இருக்கிற வீடு கூடக் காஞ்சனாவுக்கில்லையாம். சுகந்தி, எனக்கிந்தக் கல்யாணம் சரிவராது" என்று சொல்லியவன் சிறிது நேரம் சுகந்தியைப் பார்த்துக் கொண்டு நின்றான்

"அது சரி சுகந்தி, எனது அந்தஸ்துக்கு ஏற்ற தகுதியும் அழகும் உன்னிடம் உள்ளது. காஞ்சனாவைப் போலப் பொறுப்புக்களும் இல்லை. நான் தீர்க்கமாக யோசித்துத்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன். இந்த முடிவு உன்ரை கையில் தான் தங்கியுள்ளது?"

சுகந்தி ஒன்றும் புரியாதவளாக அவனை ஏறிட்டு நோக்கினாள்.

"சுகந்தி, நான் உன்னையே திருமணஞ் செய்வதாகத் தீர்மானம் செய்து போட்டன். உன்னுடைய விருப்பமும் இதுவாகத்தான் இருக்குமென்று நம்புகிறன்".

"சங்கர்" என்று தன்னையே மறந்து கத்தியவள் அவனைச் சுட்டெரித்து விடுபவள்போல முறைத்துப் பார்த்தாள்.

"நரியின் காலை விட்டு முதலை புளிமரத்து வேரைப் பிடித்ததாம். நீர் என்னபெண்கள் என்றால் கிள்ளுக்கீரை என்று நினைத்துவிட்டீர் போலும். உம்மைப்போன்ற மலருக்கு மலர் தாவும் வண்டுகள் இருக்கும்வரை இந்தச் சமூகம் ஒருபோதும் திருந்தாத

உம்மையும் ஒரு மனிதன் என்று நம்பி என்ரை சிநேகிதியின்ரை வாழ்க்கையைக் கெடுக்க முயன்றேனே! நீர் முதலில் காஞ்சனாவின் தகுதி பார்க்காமலா அவளிடம் பழ

(8-ம் பக்கம் பார்க்க)

## நான் அணைக்கும் பைரவி

ஆனந்த பைரவி நான் அணைத்திடும் பைரவியாள்
அம்சத்வனி அமைந்த அழகிய ரூபவதி
கானமிசைத் தோடிவரும் நாயகியாள் அந்தக்
கலையழகி எனக்கே தாரம் என் வசந்தா னே.

நீலமணி அணிந்த நித்யகல் யாணி அவள்
நாட்டை மகிழவைக்கும் ஜோதிஸ்வ ரூபிணி
காலமெ லாம் இதயத் தர்பாரில் தானமர்ந்தே
கல்யாண வசந்தங்கள் பாடி வரும் ரஞ்சனியாள்

பானுமதி மாறிவரும் பாருலகம் போற்றிவர
மலயமாருதம்போல மங்களகீ தம் தருவாள்
தேனுகந்தே தெவிட்டிவிடத் தீங்குரலில் தேவதையாள்
மனோலயம் மிருகீதம் பாடுமனோ ரஞ்சனியாள்

பூரணசந் திரிகாபோல் புன்னகைக்கும் சுந்தரியாள்
பூபாளம் தினம்பாடும் அவள்கௌரி மனோகரியாள்
[illegible]மா னம் வேண்டும் நா னவளை மணம் கொள்ள
நாராயணி அருள்வாள் நல்லதுணை தருவாள்.

— கோப்பாய் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

## பி. என். ராசன்

சென்ஜோன் அம்புலன்ஸ் படையின் மாகாண ஆளுநராகவிருந்த முகாந்திரம் ஈ. பி. இராசையா அவர்கள் அப்பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவனுர் சென் ஜோன் அம்புலன்ஸ் படைக்கு ஆற்றிய சேவைக்காக பிரிட்டிஷ் மகாராணியின் மிக உயர்ந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வித்தியாதானம், அன்னதானம், ஔடததானம், அபயதானம் முதலிய பல்வேறு தானங்களைச் செய்வது அறம் என்று விதிக்கப்பட்டுள்ளது. தவமும் தவமுடையார்க்காகும் என்பதுபோல இவற்றுள் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கே பலருக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. சிலருக்கே இத்தானங்களைச் செய்யவும் இத்தானங்களைச் செய்யும் நிறுவனங்களை நெறிப்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கும். இத்தகைய வாய்ப்புப் பெற்ற தொண்டர்களுள் ஒருவர் என்ற பெருமை பெற்றவர் வைத்திய கலாநிதி, சமாதான நீதிபதி, முகாந்திரம் இ. பொ. இராசையா அவர்கள்.

திரு இராசையா அவர்கள் சனசமூகநிலையஒன்றியங்களின் நிறுவனர், சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி நிர்வாக சபையின் உறுப்பினர், சைவ பரிபாலன சபையின் முக்கிய அலுவலர் என்ற வகையிலும் பலகட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டதன் மூலமும் வித்தியாதானத்தைச் சிறப்பாகச் செய்தார்கள்.

ஆயுர்வேத மருத்துவர் என்ற வகையில் திரு. இ.பொ. இராசையா அவர்கள் ஔடததானத்தையும் சிறப்பாகமேற்கொண்டார்கள். ஆயுர்வேத மருத்துவ ஆய்வை மேற்கொள்வதற்கான ஆயுர்வேத மருத்துவ பீடம் ஒன்றை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கும் இவர் பெரிதும் உழைத்தார். சுசநோய்த்தடுப்பு நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையின் முக்கிய பணியாளர்களுள் ஒருவராகி இவர் ஆற்றிய பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஏறத்தாழத் தொள்ளாயிரமாண்டுகளுக்கு முன் ஆபத்தில் உதவும் 'நல்ல சமாரியன்'களை உருவாக்கும் சென் யோன் அம்புலன்சு நிறுவனம் இலண்டன் மாநகரில் உருவாக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் அரசி மேன்மைதங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியாரே இதன் தலைவராக இருந்து பெருமை தருகிறார்.

சென் யோன் அம்புலன்சின் இலங்கை அலுவலகம் 1923ஆம் ஆண்டளவில் கொழும்பில் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சென் யோன் அம்புலன்சு நிறுவனத்தின் ஆசிரியர் திரு. அல்வினசு அவர்களால் 1930ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அல்வினசு ஆசிரியரின் சீடராக திரு. இ. பொ இராசையா அவர்கள் 1934ஆம் ஆண்டு சென் யோன் அம்புலன்சு இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினர்.

திரு. இராசையா அவர்கள் சென் யோன் அம்புலன்சு யாழ்ப்பாண மாநிலத்தின் ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஊக்கமுடன் பணியாற்றி வருகிறார். ஆண்டுதோறும் இரண்டாயிரம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் முதலுதவிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி, பயிற்சியின் முடிவில் தேர்வு நடாத்திச் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆலய விழாக்களிலும் மக்கள் பெருந்தொகையாகக் கூடும் பிற இடங்களிலும் மக்களின் நடமாட்டத்தை நெறிப்படுத்துதல், விபத்துக்களில் காயமடைந்தவர்கள், சன நெரிசலில் மூர்ச்சையடைந்தவர்கள் ஆகியோருக்கு முதலுதவியளித்தல், விழா நெருக்கடியில் பெற்றோரிடமிருந்து பிரிந்த குழந்தைகளை உரியவர்களிடம் சேர்ப்பித்தல் முதலிய பல்வேறு பணிகளைச் செய்யும் முதலுதவிப் படையினரைப் பெருமளவில் நாம் காண்கிறோம். இப்படையினர் திரு. இராசையா அவர்களது அளப்பரிய சேவைக்குச் சாட்சியாக விளங்குகிறார்கள்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இலங்கையிலுள்ளவர்களுக்கு சென் யோன் அம்புலன்சு தலைமை நிலையப் பரிசு வழங்கப்படுவது அரசினால் தடை செய்யப்பட்டிருந்தது. இப்போது அரசு இந்தத் தடையை நீக்கியுள்ளது.

1934ஆம் ஆண்டு முதல் ஐம்பது ஆண்டுகள் முதலுதவிப் படையின் வளர்ச்சிக்குப் பணியாற்றிப் பொன்விழாக் கண்ட முகாந்திரம் ஈ. பி. இராசையா அவர்களுக்கு சென் யோன் அம்புலன்சு தலைமை நிலையம் சார்பில் மேன்மைதங்கிய எலிசபெத் மகாராணியார் சென் யோன் படைத் தளபதி (Commander of the Order of St. John) என்ற உயர்ந்த பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளார். பிரித்தானிய அரசியரின் சார்பில், கொழும்பில் நடைபெறவுள்ள ஒரு விழாவில் ஸ்ரீலங்கா குடியரசின் ஜனாதிபதி கௌரவ ஜே. ஆர் ஜயவர்த்தனா இப்பட்டத்தை வழங்குவார்.

"மக நீண்ட காலமாக சென் யோன் அம்புலன்சு படைக்கு நீங்கள் ஆற்றிவரும் அரும் பெரும் பணிகளுக்கு எமது நிறுவனம் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது" என்று சென் யோன் அம்புலன்சின் தென்கிழக்காசியத் தலைமையகத்தின் தளபதி 1945ஆம் ஆண்டில் பாராட்டுரை வழங்கினர். நாற்பது ஆண்டுகளுக்குப்பின் திரு. இராசையா அவர்களுக்குத் "தளபதி" என்ற பட்டத்தை வழங்குவதன் மூலம் நிறுவனம் தனது கடனைச் செலுத்தியிருக்கிறது என்று கூறுவது தவறாகாது.

"தளபதி"யின் படை அணியில் அயராது உழைத்தவர்களை தலைமை நிலையம் மறந்துவிடவில்லை. திரு இராசையா அவர்களோடு பணியாற்றிய தலைவர்களுள் மூவருக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. திருமதி அந்தோனியா சுவாமிநாதர், வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி, திருமதி உருத்திரா கந்தசாமி ஆகியோரே பட்டம் பெற்றோராவார்.

வடமாநிலத்திலுள்ள ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் தம்சுற்றாடலிலுள்ள மக்களை ஆபத்து நேரத்தில் காக்க முதலுதவிப்படையில் சேர்ந்து பயிற்சி பெறுவது தலையாய கடமை என்பதை நினைவூட்டுவது போல இப்பட்டங்கள் கிடைத்துள்ளன. சிறுவர், சிறுமியர் அனைவரும் முதலுதவிப் படையில் சேர்ந்து பயிற்சி பெறுவது இவர்களுக்கு அளிக்கும் மிகப்பெரிய பாராட்டாகும்.



முகாந்திரம்
இ. பொ இராசையா

---

## அமெரிக்காவில் சாதனை

அமெரிக்க நீதித்துறைத் திணைக்கள அறிக்கையின் படி அமெரிக்காவில் குற்றச்செயல்கள் உலகசாதனையாக அமைந்துள்ளன

- மக்கள் வருடத்தில் 500 கோடிடாலர் பணத்தைக் கொள்ளையில் இழக்கின்றனர்.
- வருடத்தில் 200 கோடி டாலர் இறக்குமதிப் பொருள்கள் களவு போகின்றன.
- வருடத்தில் 100 கோடி டாலர் தீக்கிரையாகிறது.
- வருடமொன்றுக்கு ஒருலட்சத்தி 71ஆயிரம் பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர்.
- வருடத்தில் 4 லட்சத்து எழுபதினாயிரம் பேர் காயமடைகின்றனர்
- வருடத்தில் 20 ஆயிரம் பேர் கொலை செய்யப்படுகிறார்கள்.

– ஸச்சி

---

## யோசிக்க வேண்டும்

வானத்தில் நிற்கும்
மேகங்கள்
இன்னும்
யோசிக்கவேண்டும்
இனியும் - இங்கு
வெள்ளப்பெருக்கொன்று
வேண்டுமா என்று!

பாட்டம் பாட்டமாய்
பெய்து தள்ளி
ஓய்ந்து விடுவோமா
என்று
ஒத்திகை பார்க்கும்
இப்போது!

ஐம்பத்தெட்டில் ஆரம்பித்த
பாடலின் இலக்கமே
பக்கம் மாறி விட்ட இன்று
இதற்கு இடவேண்டியது
அரைப்புள்ளியா?
முழுப்புள்ளியா? என்று.

வானத்தில் நிற்கும்
மேகங்கள்
இன்னும்
யோசிக்கவேண்டும்!

– அ தத்வசுதன்

---

★

## சிறுகுற்றங்கள்

அறிஞனிடமும் சரி அசடனிடமும சரி சிறுகுற்றங்கள் இருப்பது சகஜம்தான் ஆனால் வேடிக்கை என்னவென்றால் அறிஞனிடமுள்ள சிறு குற்றங்கள் அவனுக்குத்தான் தெரியும். உலகத்துக்குத் தெரியாது. அசடனிடம் உள்ளகுற்றங்களோ அவனுக்குத் தெரியாது. உலகத்துக்குத்தான் தெரியும்.

ஜே மேசன்

---

# புதிய புத்தகம்

## யாழ்ப்பாணப் புவியியலாளன்

### விருத்திப் புவியியல் சிறப்பு வெளியீடு

இன்று எத்துறையிலும் அறிவியல் நோக்கு வளர்ச்சி அடைந்துள்ளது சமூகவியலாளன் ஒருவன் விஞ்ஞான அணுகுமுறையிலே தனது பணிகளை விசாலிக்க வேண்டியவனாகின்றான்; பொருளியலாளன் புதிய திட்டங்களை வகுத்துத் தனது துறையிலே புதுமைகளைப் புகுத்தவே முயலுகின்றான்.

சோதிடமாயினும், வானியலாயினும், கடலியலாய்வாகினும் இன்று பிரமாண்டமான விஞ்ஞான முயற்சிகளுடன் இணைத்து நவீனமயமாக்கப்பட்டுள்ளன. அண்மையில் கடலினுள் நிகழ்ந்த இந்திய-போயிங்-'கனிஷ்கா' விமானத்தின் சிதைவுகளைத் தேடல் முயற்சியானது ஆழ்கடல் விஞ்ஞான வளர்ச்சியில் தனித்துவம் பெறும் ஒரு நிகழ்வாயிற்று இவை போல்வன அண்மையில் நிகழ்ந்துவரும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

புவியியலாளன் ஒருவன் தனது நுண்ணறிவினை நாடுகளது தொழில்நுட்ப,குடிசார் அபிவிருத்திகளைப் பகுத்து, கூர்ந்து ஆராயும் முறைமையில் புதிய செய்திகளைத் தருபவனாகின்றான். மூலவளம், மூனிவளம். உற்பத்தி இனவளர்ச்சி, கனிவளம், தொழில் நுட்பம், கைத்தொழில் மயமாக்கல், ஏற்றியிறக்கல், என்றின்னோரன்ன துறைகளில் நுட்பமான ஆய்வுகள் அண்மைக்காலங்களிலேயே தமிழில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

பிற நாடுகளில் பன்முகப்பட்ட புவியியல் - பொருளியல் சார்ந்த நடவடிக்கைகளைப் புள்ளிவிபர- அறிவியல் நிலை நின்று தொகுத்து வழங்கும் பணியினைச் செம்மையாகச் செய்து முடித்துள்ளான். "யாழ்ப்பாணப் புவியியலாளன்" பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களது 13 கட்டுரைகளைத் தாங்கி மலர்ந்துள்ள (1983—1984) 'புவியியலாளன்' என்னும் அபிவிருத்திப் புவியியல் மலர் தமிழிலே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க 'அறிவியல் ஏடு' என்றே வர்ணிக்கத்தகும் ஒன்று.

### கனகசபாபதி நாகேஸ்வரன்

யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறையில் வெளியீடான 'புவியியலாளன்' இதழின் ஆசிரியர் ஜெ ஜெயராஜ் மலரின் சீரான வெளியீட்டுக்கு உழைத்து ஆலோசனை வழங்கியவர் கலாநிதி இ மதனாகரன். இவர்களது அரிய முயற்சியால் மலர்ந்துள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் நுண்ணாய்வுகளின் முடிவுகளைத் தெரிவிப்பன; மாணவருக்குப் பெருவிருந்தாவன,

மலர் கொண்டுள்ள விடயங்களைப் பார்த்தால் முறையே, விருத்தியும் விருத்தி தொடர்பானகருத்துக்களும், விருத்தி அடைந்துவரும் நாடுகளில் விருத்திக்கான தடைகள், விருத்தியடைந்துவரும் நாடுகளின் பொதுவான பண்புகளும் வேறுபாடான அமைப்புகளும்; இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு குறைவிருத்தியம்சங்களும், பொருத்தமான தொழில் நுட்பமும் விருத்தியடைந்துவரும் நாடுகளும், விருத்தியும் குடித்தொகை நிலை மாற்ற கோட்பாடும், விருத்தி அடைந்துவரும் நாடுகளின் வர்த்தகம், வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் மத்திய இடங்களின பங்கு, ஜப்பானின் வெளிநாட்டு உதவி, விருத்தியடைந்து வரும் நாடுகளில் தொழிலின்மையும் அதனோடு தொடர்புடையபிரச்சினைகளும, விருத்தியடைந்துவரும் நாடுகளில் நகரவாக்கம்; நில மதிப்பீட்டு ஆய்வுகளில் நில ஆய்வுகளினதும் நில வகைப்பாடுகளினதும பங்கு, விருத்தியடைந்துவரும் நாடுகளின் கல்வி நிலை என்னும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதிகள், இ மதனாகரன், கா. ரூபமூர்த்தி எஸ் ரி பி. இராஜேஸ்வரன், விரிவுரையாளர் க. கி ஆறுமுகம், உட்பட மாணவர்களும் போதனாசிரியர்களும் கட்டுரைகளை எழுதியுதவியுள்ளனர்

விருத்திப் புவியியல் சிறப்பு வெளியீடாக யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழை யாழ் பல்கலைக்கழகப் புவியியற்றுறையில் ரூபா 20/ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

○

### மல்லிகை

'மல்லிகை' ஜூலை இதழ் வரப்பெற்றோம். 12வது இளைஞர் விழா ஞாபகார்த்தமாக வெளிவந்துள்ள இவ்விதழில் பல கனமான விஷயங்கள் இடம்பெற்றுள்ளன.

---

## சிறுகதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தொடங்கினீர்? என்னுடைய சிநேகிதிக்குத் துரோகம் செய்த உம்மைநான் திருமணம் செய்வேன் என்று கனவிலும் நினைக்காதீர். உம்மைப்போல நானும் எனது சிநேகிதிக்குத் துரோகம்செய்ய மாட்டேன்."

ஆத்திர மிகுதியால் சுகந்திக்கு மூச்சு வாங்கியது; சங்கரால் வாயை திறக்க முடியவில்லை. அவள் ஆவேசம் வந்தவள் போல வார்த்தைகளைக் கொட்டித்தீர்த்தாள்.

"ஒரு பெண்ணின் உள்ளத்தில் சலனத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி விட்டு உமக்குச் சுயலாபமில்லை என்று அறிந்தவுடன் நழுவிக்கொள்ள முயல்வது உங்கள் வியாபார தந்திரமாக இருக்கலாம் ஆனால் ஒரு பெண்ணின் வாழ்வோடு சம்பந்தப்பட்டது இது. உம்மைப்போன்ற ஒரு துரோகியிடமிருந்து காஞ்சனா தப்பியதே அவளுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்.

"இப்போது நீர் காஞ்சனாவை ஏமாற்றவில்லை உம்மையே ஏமாற்றிக்கொண்டு விட்டீர்." பூம்பூம் என்று அந்த பெண்ஸ்கார் பறக்கிறது.

ஏதோ ஒரு பெரிய சுமையை இறக்கிவைத்தது போன்ற நிம்மதியில், சுகந்தி காஞ்சனாவின் வீட்டைநோக்கி விரைந்தாள்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆனந்தமும் அமைதியும் பெற வழிகாட்டுபவை திருமுறைகள்

இறைவனுடைய அருளை மக்கள் அறிந்தும் உணர்ந்தும் அனுபவித்தும் ஆனந்தமும் அமைதியும் அடைவதற்குவழி காட்டுவன திருமுறைகளே. இவை திருச்சிற்றம்பலம் என்ற முத்திரை பொறிக்கப் பெற்றவை. விநாயகப்பெருமானருளால் வெளிக்கொணரப்பட்டவை. சிதம்பரத்தில் நடராசப்பெருமான் சந்நிதியில் கண்டுபிடிக்கப்பட்டவை. 1ம் இராசராசசோழனால் வெளிப்படுத்தப்பட்டவை. இதனாலேயே அவனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ற சிறப்புப்பெயரும் உண்டு. அம்மன்னனின் வேண்டுகோட்படி திருமுறைகளை அடைவு செய்

திருமுறைகண்டசோழன் என்னும் சிறப்புப் பெயர் தாங்கிய சோழ மன்னன் இராசராசனுடைய ஆயிரமாம் ஆண்டு நிகழ்ந்துகொண்டிருக்கும் இவ் வேளையில், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பன்னிருதிருமுறைகளும் 4-5-85தொடக்கம் மூன்றுமாதகாலமாக ஒழுங்காகப் படிக்கப்பட்டு நாளை 12-8-85 திங்கட்கிழமை பூர்த்தி விழா நடைபெற விருப்பதை முன்னிட்டு இக்கட்டுரை வெளிவருகிறது.

திருமுறைகள் எமக்குத்தரும் அமைதி தனித்துவமானது. இவற்றை ஒவ்வொரு மனித

என்பது அவர்கள் அருள் வாக்காகும். இன்னும் எத்தனை, எத்தனை இனிய வேண்டு

அருள்வாக்குக் கொடுக்கிறார்: அதுவுமன்றி சுருதி பிழையாமல் பாடுகிறானா என்று எம்பெருமான் கவனிப்பதில்லை. ''உள்ளத்தால் உருகிப் பாடுகிறான்'' என்பதையே கவனிக்கிறான் என்றும் எடுத்துக் காட்டுகிறார்கள். திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுபவர்கள் நோய்க்கும், பேய்க்கும், நாளுக்கும், கோளுக்கும், பகைவர்க்கும் பாம்புக்கும் ஏன், இயமனுக்குமே அஞ்சமாட்டார்கள்'' கோளறுபதிகம் இதனைக் காட்டுகிறது.

மனிதனை மனிதனைக் காண்கிற கண்கள் இன்று இந்த உல

உணர்ச்சித்தமிழ், மறுமலர்ச்சித்தமிழ், பண்ணிசைத் தமிழ், பக்தித்தமிழ் என்றெல்லாம் போற்றத் தக்கது திருமுறைத் தமிழாகும். இதனாலேயே இவை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் இறவாத் தன்மை பெற்றுள்ளன. இவற்றைப்பாடுவதும், பாடக் கேட்பதும், பாட வைப்பதும் சைவத் தமிழ்ச் சான்றோர் பெருங்கடனாகும். சைவத்திரு நெறியையும், தமிழ் இலக்கியச் சுவையையும் இவை அடக்குவன. இக்காலத்தவர் வாழ்வில் தளர்ச்சியும், இடர்பாடுகளும், ஏக்கமும், அமைதியினமும் மிகுதியும்குடி கொண்டுள்ளது, எனவே மக்களுக்கு அமைதி வழியை அறநெறியோடும், அன்பு நெறியோடும் அருள் நெறியோடும் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்குத் திருமுறை பிரார்த்தனைகளே இன்றியமையாதவை. இதனால் ஆக்கமும், ஊக்கமும், நற்பண்பும், நிம்மதியும் ஏற்பட வழிபிறக்கிறது இவை சில வாக்கியங்களாகும். இதனையுணர்ந்தே திருமுறைகளுக்குரிய மதிப்பை கொடுத்தான் இராசராச சோழன். சுரம் நீங்கவும், விடம் நீங்கவும் பஞ்சம் நீங்கவும், மழை பொழியவும், திருமணம் நிறைவுறவும். குழந்தைச் செல்வம் கிடைக்கவும், கண்ணொளி பெறவும், பொன் பெற்று மிளிரவும், சோறும் கூறையும் கிடைக்கவும் இப்பாடல்கள் வழி வகுப்பன என்பது நாயன்மார்களின் நம்பிக்கை. இவை நம்நாட்டு அருளாளர்களால் எங்கள் புண்ணிய பூமியிலே பாடப்பட்டவை. ஆகவே இவற்றுக்கு ஒரு தனிப்பெருஞ்சக்தியுண்டு. நமது பண்பாட்டுக்கும், இனத்துக்கும், மொழிக்கும், பெருந்தீங்கு நேரிட்டபோதும் அதனைத் தடுத்து நிறுத்தி அரண்போல் காத்தருளும் சக்தி திருமுறைகளுக்குண்டு என்பது சைவமக்களின் அசையாத நம்பிக்கை.

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

தருளியவர் நம்பியாண்டார் நம்பிகள் இவையனைத்தையும் தோத்திரங்கள் எனப் போற்றுவர். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முதலிய இருபத்தேழு ஆசிரியர்களாலே அருளிச் செய்யப்பட்டவையே இவையாகும். ஒரு நாடு நலம் பெறவேண்டுமாயின் அந்நாட்டுச் சான்றோர்களே முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்பது ஔவையாரின்பொன்மொழி. வீட்டையும் நாட்டையும் பேணிக்காத்த பெருமை நன்மக்களுக்கே உரித்தானது ஏனெனில் மக்களின் மன நலம் சார்ந்த செம்மையான வாழ்வுதான் நாட்டை நல முறவைப்பது. இத்தகையபெரு மக்கள் வரிசையில் நமது அருளாளர்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள். திருவருள் வழி நின்று உலகை வளம்பட வழி நடத்தியவர்கள் அவர்கள். ''வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்'' என்ற பாரதியின் வாழ்க்கை ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறைப்படுத்திக் காட்டியவர்கள் நாயன்மார்கள். கடவுள் நம்பிக்கையோடு கூடிய நல்ல செயல்களுக்கு என்றும் வெற்றியுண்டு என்பதை மெய்ப்பித்துக்காட்டியவர்களும் இவர்களே. மக்களோடு மக்களாய் நின்று தாமும் இயங்கி மற்றவர்களையும் இயக்கி அறிவுக் கண்ணை திறக்கச் செய்தவர்கள் இவர்கள். இதற்கு இவர்கள் மேற்கொண்ட நெறியே பாடல் நெறியாகும். இதன் காரணமாகவே பன்னிருதிருமுறைகள் நமக்குக் கிடைத்துள்ளன.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடியருளப்பட்டவை தேவாரம்எனப்படும் தேவாரம் வேத சிவாகமங்களின் சாரமாக அருளிச்செய்யப்பட்டவை இவற்றில் இன்று நமக்குத் திருஞானசம்பந்தர் அருளிய 4158 பாடல்களும், திருநாவுக்கரசர் அருளிய 3064 பாடல்களும், சுந்தரர் அருளிய 1026 பாடல்களும் தேவாரங்களாகக் கிடைத்துள்ளன இவை முதல் ஏழுதிருமுறைகளாகும். மணிவாசகர் அருளிய 8ம் திருமுறையாகிய, திருவாசகமும், திருக்கோவையாரும் 1058 பாடல்களாகும் 9ம் திருமுறையில் 30 பாடலும் 10ம் திருமுறையில் 3069 பாடல்களும் 11ம் திருமுறையில் 1388 பாடல்களும் 12ம் திருமுறையில் 4256 பாடல்களும் உண்டு பன்னிரு திருமுறைகளும் மொத்தமாக 18 289 பாடல்களை அடக்கியவை. ஈழத்தின் இருதலங்கள் உட்பட 274 தலங்கள் தேவாரப்பாடல் பெற்ற தலங்களாகும் இத்தலங்களை வழிபட்டு பெருமையடைய வேண்டியது சைவமக்களின் கடனாகும்.

உள்ளத்திலும் நாட்டி விடுவோமானால் அதுவே நாட்டுக்கும் நமக்கும் எழுச்சியைத் தந்து நிற்கும். ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கி ''நிலவி உலகெலாம்'' என்று முடிகின்ற அமைப்பில் இவை அமைந்து எம்மை

நெறிப்படுத்துகிறது. திருமுறை ஆசிரியர்கள் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாடு நலிவுற்றுக் கிடந்தது சோற்றுக்கும், சீலைக்கும் கையேந்தி நின்ற காலமது. தேவார முதல்வர் இவர்களை ஆற்றுப்படுத்தினர் தன் ஆண்டவனிடம்.

''இம்மையே தரும் சோறும்
-கூறையும்
ஏத்தலாமிடர் கெடலுமாம்''

தல்களைத் திருமுறைகளில் காண்கிறோம். எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிந்து முடித்து வருகின்ற மனிதன் இன்னும் தன்னைத்தான் அறியாமல் திண்டாடுகிறான் என்பதே திருமுறை ஆசிரியர்கள் கவலை. வாழமுடியாது அலைந்துதிரியும்

மக்களைப் பார்த்து,

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்று வழியுரைக்கிறார் ஞானசம்பந்தர் 'அருச்சனை செய்யப் பணம் இல்லை; பழம், பாக்கு, வெற்றிலை என்று கவலையடைய வேண்டாம் நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க அருச்சனை பாட்டேயாகும்'' என்று

கில் மழுங்கிவிட்டன. வேறுபாடும், கூறுபாடும், மாறுபாடும் கற்பித்துச் சமூகத்தில் களங்கம் ஏற்படுத்தி வாழுமியல்பு சைவ மக்களிடையில் பலகாலமாக ஒரு சாபக்கேடாக இருந்தது இவை மெல்ல, மெல்ல விலகி ஒளிமயமான சமுதாயம் ஒன்று உருவாக வேண்டுமானால்,

''சாத்திரம் பேசித்திரியும்
-சழக்கர்காள்
கோத்திரமும் குலமும்
-கொண்டென் செய்வீர்''

என்ற வாக்குகள் எமது செவியினூடாக உள்ளத்தைத் தொட்டுக் குருதியில் கலக்க வேண்டும்.

திருமுறைச்செல்வம் தமிழன் பெற்ற தனிப்பெருஞ் செல்வம். அழகுத்தமிழ், அன்புத்தமிழ் அமுதத்தமிழ்,

---

# யாழ்ப்பாணத்தில் தெருக்கூத்து!

**ஈ. ஆர். திருச்செல்வம்**

பழமையிற் பழைய கலை வடிவங்களில் ஒன்றான தெருக்கூத்து அண்மைக் காலங்களில் புதிய கலைகளாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலவேறு பகுதிகளில் - பட்டி தொட்டிகளில், சில இளைஞர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. அழிந்து போகும் கலைக்குப் புத்துயிரும், புது வடிவமும் கொடுப்பது போல் ஜதிகளையும், அசைவுகளையும் கையாளுகிறார்கள் தெருக்கூத்தை ஆடிப் பாடும் பொழுது இவர்கள் நெஞ்சை அழுத்தும் உணர்வுப் பாரத்திலிருந்து விடுதலை பெறுகிறார்களோ, என்னவோ? ஆனால், அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக போர் நடனம் போல் ஆடுகிறார்கள் பாணாசுரனுடைய சிறையிலிருந்து தனது பேரப்பிள்ளையான அநிருத்தனை விடுவிக்க ராஜலீலையில்வல்லவனான மாயோன் குடம் கொண்டு ஆடியதாக ஒரு ஐதிகம். அவுணர் போர்க்கோலம் ஒழியச் செந்நிறத் திருமகள் கொல்லிப்பாவை வடிவங்கொண்டு ஆடியதாகச் சொல்வதுண்டு. ஆடலிலும் ஒரு ராஜலீலை!

தெருக்கூத்து; ''திருவிழாக் காலங்களில் கிராம அரங்கத்தில் ஆடப்படும் நடன நாடகமாகும்'' (தென் இந்தியக் கிராமிய நடனங்கள் பக்கம்: 50) இந்து சமயத்தில் நாடகங்கள், ஆடல்கள் முதலின சமயச் சடங்குகளாகவே ஆரம்ப நிலையில் நிகழ்த்தப்பட்டன இது உலகளாவிய பொதுமைத்து. வங்காளத்தில் நகைச் சுவையளிக்கும் யாத்திரா ஆடல் முறை, இந்தியாவின் ஏனைய பகுதிகளில் நடிக்கப்படும் ராம்லீலா, ராஸ்லீலா, இயேசுவின் திருப்பாடுகளைக் குறிக்கும் பாஸ், சூரன் போர் ஆகியன இன்றும் சமயச் சடங்குகளாகவே செயற்படுகின்றன. ஆனால் நம்பிக்கைகள் சிதறிப் போது ஒரு காலத்தில் பக்தி

யாகவிருந்த நிகழ்ச்சி லௌகீக அல்லது உலகியல் மயமாக்கப்பட்டுப் பொழுதுபோக்காகவும், அரசியல் போக்கின் விஸ்தரிப்பாகவும் மாறலாம் தென் இந்தியாவில் பெரும்பாலும் பரபு நாடகங்கள் அரசியற் கருத்துக்களை வலியுறுத்துகின்றன. சுதந்திர இயக்கக் காலத்தில் நாடக அரங்கில் இடையிடையே பாரதியின் சுதந்திர கீதங்கள் இசைக்கப்பட்டன. இவ்வகையில் தெருக்கூத்தும் லௌகீக மயமாக்கப் பட்டுத்

தமிழ்நாட்டில் சமுதாய இயக்கத்துக்கு இம்முறை காயாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது இதை அடிபொற்றியே நம்மவர்களும் தெருக்கூத்து ஆட்ட முறையை அரசியல் போக்கின் விஸ்தரிப்பாக மாற்றி, அரசியல் நிகழ்வுகளைச் சித்தரிக்கிறார்கள்.

இஸ்லாத்தின் சக்தியை, கிறிஸ்தவர் வெற்றி கொண்டமையைக் காட்டுவதற்கு இதே போன்று மொரோ மொரோ நாடகங்கள் பிலிப்பயின்ஸில் பயன்படுத்தப்படுகின்றன. இந்தோனிஷியாவில் இஸ்லாம் மதக் கோட்பாட்டைப் பரப்புவதற்குக் கிராமிய ஆடல் வடிவமான வயாங் குலிட் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ சமயப் பிரசாரர்கள் நாடகத்தை ஒரு சமயம் பிரசாரக் கருவியாகப் பயன்படுத்தினர்கள் ஐரிஷ் விடுதலை இயக்கத்தினரும் அவர்களது பண்பாட்டுக் கூடலில் நாடக அரங்கை ஓர் அரசியல் தொடர்புச் சாதனமாகவே பயன்படுத்துகின்றனர்.

### தொல்காப்பியத்தின் அற்புதச் சுவை

இப்போது தெருக்கூத்து யாழ்ப்பாணத்தில் செயற்படுகிற முறை எமது பண்பாட்டுப் பின்னணியைக் கொண்டே அமைந்துள்ளது. தொல்காப்பியத்தில் கூறப்படும் இருவகை அங்கதச் சுவைகளும யாழ்ப்பாணத்துத் தெருக்கூத்துகளிலே பரவிக் காணப்படுகின்றன செம்பொருள் அங்கதம் (நேரடித் தாக்குதல்), பழிகரப்பு (மறைமுகத் தாக்குதல்) ஆகிய இரு உத்திகளும் பாடல்களில் இழையோடி நிற்கின்றன சாக்கையர் கூத்தில் பிர

தம நடிகரும் மற்றவர்களும் அங்கதமாகப் பேசுவதுண்டு. தமிழர் மரபில் கூத்தோடு அங்கதமும் சேர்ந்ததாகும். இது பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் எமது தெருக்கூத்துப் பாணியில் அமைந்துள்ள கொமெடியா - டெ - லார்த்தாவை நினைவூட்டுகிறது. அறிவுரை புகட்டவேண்டும் என்ற தூண்டுதலால் சமகால அரசியற் பிரச்னைகளை கடைவிகடமாகச் சுவைபடச் சாடும் முறையை கொமெடியா - டெ - லார்த்தாவிலும் காணலாம்.

தமிழகத்தில் பழங்காலம் தொட்டே கூத்து என்ற சொல் வழக்கிலிருக்கிறது. இது 'குதி' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது என்றும் சொல்வர். எப்படியிருப்பினும் தெருக்

(10-ம் பக்கம் பார்க்க)

---

## இறங்குமா நம் பிறசரே?

குறங்குபோல வில் பிடித்த
காலதூதர் 'கோட்' டிலே
உறங்குகின்ற காரணத்தால்
உறங்கிறோம் எம்விட்டிலே!
இறங்குகின்ற தின்று காண்
எனக்கிருந்த பிறசரும்!
திறங்கிடந்த டொக்ரர் எந்தன்
பிறசர் பார்த்துச் சொல்கிறார்.

மறங்கடந்த போர்களாலே
'மாறி'ஓட விதியே
உறங்குகின்ற காரணத்தால்
இறங்குமாம் என் பிறசரும்!
அறங்கிடந்த நெஞ்சரே, நல்
அரசியல் விஞ்ஞரே!
திறங்கிடந்த திம்புவாலே
தீருமா'நம் பிறசரே'?

— சத்தியசிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் எப்படி?

மாதம் ஆடி
திகதி 27 (1985-8-11)
ஞாயிறு
திதி தசமி பிற்பகல் வரை
நக்ஷத்திரம்
ரோகிணி பி. ப.வரை

## மேடம்

நிதி நிலையில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழிக்கு ஆளாவர் விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவெடுக்கும் பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

## இடபம்

கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் உடல்நலமும் பாதிக்கப்படலாம் அவசரப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்துக்கொள்ளவும். பொறுமை விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அனைத்துக் கொள்ளநேரும்.

## மிதுனம்

பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல் மூலம் அதிக ஆபத்துக்கு இடமுண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சிநிலவும். நண்பர்கள் மூலம் நல்வரவுகளுக்கும் இடமுண்டு திடீரெனவரும் சந்தர்ப்பம் பிரயாணத்திற்கு வழிவகுக்கும்.

## கடகம்

ஆணவப்போக்கினால் அடி சறுக்க நேரிடும் அதிகநம்பிக்கை ஆபத்தைத்தேடித்தரலாம் தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும் பூமிப் பிணக்குகளினால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் அடக்கமாக இருக்கவும்.

## சிங்கம்

வாழ்வில் இவ்வாரம்வெற்றி வாரமாகும் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் புதிய பொருள் கொள்வனவு செய்வதற்கு நன்று. பந்தபாசம் உங்களைப்பரவசப் படுத்தும். கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும் தாய் வழியால் மகிழ்ச்சி தென்படும்.

## கன்னி

எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள்பொது மக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படலாம். தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்கு இருக்கும் தொழில் புரியும் இடத்தில் கருத்துவேற்றுமைகள்தோன்றலாம் நாவடக்கம் நன்று.

## துலாம்

பகைமூட்டம் தோன்றும். பதற்றமும் உடன்சேரும். மிகையானபோக்கினாலே மனம் பாழாகும். சுறுசுறுப்புக்குன்றும் உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்திலும் சிறு பூசல்கள் தோன்றிமறையும். கோபத்தை அடக்கவும்.

## விருச்சிகம்

பூமியால் வரவுக்கும் இடமுண்டு விவசாயிகள்வாழ்க்கையில் நல்லமாறுதல்கள் ஏற்படும். மணவாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உருவாகும் கணவன் மனைவிஉறவு முறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும் அமைதிதரும் வாரம்.

## தனுசு

தூக்கம் விழிகளைத்தழுவ மறுக்கும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக்கெடுப்பதற்குச்சிலர் முனைவர் குறைகேட்கவும் நேரும். கடமைகளில் தடைகள் தோன்றும். நஷ்டத்திற்கும் இடமுண்டு வியாபாரிகள் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

## மகரம்

உடம்பை அலட்டிக்கொள்ளாமலே உயர்வுக்கு வழி காண்பீர்கள்மேலிடத்து உறவு உற்சாகத்தை அளிக்கும். பிதாவழிமூலம் தகுந்த உதவி கிடைக்கும். கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

## கும்பம்

தொழில்துறையில் புதிய வெற்றிகிடைக்கும் துணிச்சலுடன் காரியங்களைச்சாதிப்பீர்கள் சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம். சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்றுக்கும் இடமேற்படலாம் சிறப்பான வாரம்.

## மீனம்

வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். புதுமையான சம்பவங்களும் இடம் பெறலாம். பலவழிகளிலும் பணவரவுக்கு இடமுண்டு சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

# சுந்தரரின்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ப்பு வேண்டுமென திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கொள்கையாகக் கொண்டிருந்தது.

1947-ம் ஆண்டு முதல் சுயேச்சையாகச் செயல்பட்டுப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிக்கு ஆதரவாக இருந்துவந்த திரு செல்லப்பா சுந்தரலிங்கம் சிங்களம்மட்டும் மசோதாவை வன்மையாக எதிர்த்ததுடன் ஜி ஜி யின் தமிழ்க் காங்கிரஸிற்கும் எஸ். ஜே. வி. யின் தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கினார். சிங்களம் மட்டும் மசோதாவுடன் அரசுக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்யப் போவதாகவும் பாராளுமன்றத்தில் அறைகூவல் விடுத்தார்.

(மிகுதி அடுத்தவாரம்)

# ஹேலியின் வால்வெள்ளி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வியாழனைக் கடந்தது 1986 ஜனவரியில் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படும் போது நாளொன்றுக்கு 25 லட்சம் மைல் (2½ மில்லியன் மைல்) வேகத்தில் சென்று கொண்டிருக்கும். கி. பி 2023 அளவில் மீண்டும் அதன் பாதையின் வெளிப்புற எல்லையை அடைந்து திரும்பி 2061 இல் ஞாயிற்றுக்கு அண்மையான நிலையை அடையும்.

1985 ஜூன் மாதத்தில் பூமியிலிருந்து ஏறத்தாழ 44 கோடி மைல் அல்லது 70 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் மணியொன்றுக்கு 46,000 மைல் அல்லது 74 000 கிலோ மீற்றர் வேகத்தில் வந்துகொண்டிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

### அழிவு

வால்வெள்ளிக்கு ஒரு தலையும் இரு வகையான வால்களும் உள்ளன. பேராசிரியர் பிறெட் விப்பின் (Prof Fred Whipple)என்பவரின் கூற்றுப்படி அதன் தலை அல்லது உள்ளகம் அல்லது கோமா (Head or Nucleus or Coma) அழுக்கு நிறைந்த பனிக் கோளமாகும் (Nucleus is a dirty snowbule) இப்பனிக் கோளத்தினுள் உறைந்த நிலையிலுள்ள வாயுக்கள், பனிக்கட்டிகள், தூசுகள் போன்றவை அடங்கியிருக்கும், ஒரு சில மைல் அல்லது கிலோ மீற்றர் கனமுள்ள தலை ஞாயிற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது வாயுக்கள் வெளியேறிக்கொண்டிருப்பது ஒரு வகையான வாலாகவும், தூசுகள் வெளியேறிக் கொண்டிருப்பது இன்னொரு வகையான வாலாகவும் தோற்றமளிக்கும் வாலின் நீளம் பல்லாயிரக்கணக்கான மைல் அளவினதாக அமையும். பல வால்வெள்ளிகள் குறுகிய ஆயுளுடையவை. ஞாயிற்றை நெருங்கியதும் அழிந்துவிடுகின்றன. வேறுசில கோள்கள், துணைக்கோள்கள் போன்ற அண்ட உறுப்புகள் மீது மோதியும் அழிந்துவிடுகின்றன. 30-6-1908 இல் மத்திய சைபீரியாவில் ஒரு சிறிய வால்வெள்ளி மோதியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

### மக்களின் நம்பிக்கை

வால்வெள்ளிகள் தென்பட்டால் உலகில் பல கெடுதியான நிகழ்சிகள் ஏற்படும் என மக்கள் நம்புகின்றனர். கி., பி 66இல் ஜெருசலேம் நகரம் அழிந்தமைக்கும்,கி பி 1066ல் பிரித்தானிய அரசர் ஹரல்ட் மரணமானதற்கும், கி. பி. 1453 துருக்கியர் தோல்வியடைந்தமைக்கும் 1910இல் பிரித்தானிய மன்னர் ஏழாம் எட்வர்ட் காலமானதற்கும் 1914இல் உலக மகாயுத்தம் மூண்டதற்கும் வால்வெள்ளிகள் தோற்றமளித்தமையே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

### பணம் தேடும் புள்ளிகள்

வால்வெள்ளிகள் தோற்றமளிக்கும் காலங்களில் மக்களின் 'பலவீனத்தை'ப்பயன்படுத்தி பணம் சம்பாதிப்பவர்களும் உளர். 1910இல் கெடுதியான பாதிப்புகளிலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடிய 'வால்வெள்ளி' மாத்திரைகள் [Comet Pills] ஐக்கிய அமெரிக்காவில் பெருமளவில் விற்பனையாகின. நச்சுவாயுக்களைத் தடுப்பதற்காக ஜன்னல் கதவுகளும்வாயிற்கதவுகளும் பூட்டி வைக்கப்பட்டன. இம்முறையும் ஐக்கிய அமெரிக்காவில் சுமார் 16 வகையான மேலங்கிகள் [Comet 'T' Shirt]விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனை வகையான பணிகளுக்கு இடமுண்டு. காலத்திற்குக் காலம் வால்வெள்ளிகள் தோற்றிய வண்ணம் இருக்கும். இயற்கைஅழிவுகளும் செயற்கை அழிவுகளும் உலகில் நிகழ்ந்து கொண்டிருக்கும்

பேராசிரியர் பிறெட் ஹோயில் (Prof Fred Hoyle) என்பவர் வால்வெள்ளிகள் மூலமே உயிரினங்கள் பூமிக்கு முதன் முதலாக வந்தன என்றும் வெளியேறும் நச்சுவாயுக்கள் வளிமண்டலத்திற் கலப்பதனால் மக்கள் பல கொடிய நோய்களுக்கு இலக்காகிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறியுள்ளார் இக்கூற்றினைப் பிரபல வைத்திய நிபுணர்கள் முற்றும் சரியானது என ஏற்க மறுக்கின்றனர்.

# யாழ்ப்பாணத்தில்

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

கூத்து, புராதன வழக்காகக் கிராமிய இசைக் குழுக்களால் நிகழ்த்தப்பட்ட கலையாகும். இந்த ஆட்ட முறையில் சாதாரணமாகக் கையினால் வாசிக்கப்படும் தோற்கருவிகளே பயன்படுத்தப்படும். ஆட்டமும் மிகவும் இலகுவானது. இந்த வழக்கத்தைப் பயன்படுத்திய குச்சி கொண்டு அடிக்கப்படும் தோல் கருவி (தித்த), ஒரு பக்கம் கையினாலும் மறுபக்கம் குச்சியினாலும் வாசிக்கப்படும் (ஆதத பறை மேளங்கள் யாழ்ப்பாணத்தில் பாவிக்கப்படுகின்றன. ஆட்டத்தில் மூன்று, நான்கு அக்ஷரங்கள் கொண்டுள்ளன. கும்பி, கோலாட்டம், கரகம், காவடி, புரவியாட்டம், ஒயிலாட்டம் போன்ற கிராமிய ஆட்ட வடிவங்களில் இவ்வகை ஆட்டங்களும், தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துத் தெருக்கூத்தில் முகத்துக்குச் சாயம் பூசியும், முகமூடிகளை அணிந்தும் ஆடுகிறார்கள். இந்த மரபிலான சில ஆட்ட வகைகளில் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது கிரேக்க நாட்டிலும் கிறிஸ்துவுக்கு முன்னரே முகத்துக்கு வெள்ளைச் சாயம் பூசி, முகமூடிகளையும் அணிந்து ஆடினார்கள். இவர்களும் எம்மைப் போல் வண்டிகளில் சென்று நாடுதோறும் நடித்ததாகச் சொல்லப்படுகிறது Comedia

(11ம் பக்கம் பார்க்க]

# ஜெர்மன்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறைச்சாலைகளில் நூற்றுக் கணக்கானவர்கள் அடைபட்டுக்கிடக்கிறார்கள்.

ஈழத்தையே சரியாகத் தெரியாத பலர் ஜெர்மனிக்குச் சென்று படும்பாடு பரிதாபத்திற்குரியது. உதவி செய்ய ஒருவர் அங்கு இருக்கிறார் என்று செல்பவர்களுக்குக்கூட உழைக்க முடியாத கட்டுப்பாடு அங்குண்டு அப்படிப் பட்ட நிலையில் முன்பின் தெரியாத இடத்திற்குச் செல்பவர்கள். உண்ணும் உணவோடு அவர்கள் விடும் கண்ணீரும். வயிற்றுக்குள் சென்று செமிக்கிறது. ஜெர்மன் செல்வதற்குப் பட்ட கடன் வேறு.

இப்போ கோடைகாலச் சுவாத்தியம் ஓரளவு ஒத்துப் போகிறது ஆனால் இன்னும் இரண்டு மாதத்தின்பின் பனி கொட்டத் தொடங்கினால் அவர்கள் விடும் கண்ணீரும் பனியோடு சேர்ந்து உறையுமே தவிர ஈழம் வாழ் மக்களுக்குத் தெரிய உருகிவராது. ஜெர்மன் கூண்டுக்குள் இலங்கைக் கிளிகள் சிறகு வெட்டப்பட்ட நிலையிலேயே வாழ்கிறார்கள் கூண்டைவிட்டுப் பறக்க சிறகொடிந்த பறவையால் முடியாது அவர்கள் வரவிரும்பினால் செஞ்சிலுவைச் சங்கம் தன் செலவிலேயே இந்தப் பறவைகளை விமானத்திற் கொண்டுவந்து சேர்க்கும். இங்கு வந்த பின்பு முளைக்கும் சிறகை அடித்துப் பறந்து அவை தம் இனத்தோடு சேர்ந்து சுதந்திரமாக வாழும்.


## யாழ்ப்பாண மக்களுக்கோர் மகிழ்ச்சியான அறிவிப்பு!!

| | | |
|---|---|---|
| ம | நி | த |
| லி | தா | ர |
| வு | ன | ம் |
| | ம் | |

அச்சக உரிமையாளர்கள் அரச அலுவலகங்கள்!!!
பாடசாலை மாணவர்கள்!! தனியார் நிறுவனங்கள்!!!

அனைவர்க்கும் தேவையான

- ★ காகிதாதிகள் ★ காப் (F) போட் வகைகள்,
- ★ ஸ்ரேசனறி வகைகள் ★ மின்சார உபகரணங்கள்
- ★ கிழக்கிலங்கை கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் வழங்கும்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

### அம்பலவாணர் அன் சன்ஸ்,

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291 தந்தி: "வாணர்சன்ஸ்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் சினிமா
10-30, 2-30
ஜெய்சங்கர்—பானுமதி
மேஜர் மீனுட்சி
(புதியபிரதி கலர்)

ஹரன் மினி
தினசரி 10-30, 2-30, 6-30
M. G. R. சரோஜாதேவி
நம்பியார் நடித்த
கலங்கரை விளக்கம்
புதிய கொப்பி

மேஃபெயர் மினி
சினிமா
(கன்னுநிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4 45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

மொடேர்ண்
மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சகவேலை ராஜா தியேட்டருக்கு அருகாமையில்
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி கணேசன்-ராதிகா
சட்டம் ஒரு சக்கரம்
அதிசிறந்த குடும்பச் சித்திரம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45.
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான்
பிள்ளையா
(புதிய கொப்பி)

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்)
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
7-8-85
தினசரி 10-30, 2-30, 4-30, 6-30
அதிர்ச்சியூட்டும் பயங்கரசம்பவங்கள் இருதய பெலவீனமானவர் இரத்தக்கறை பார்க்க முடியாதவர்கள் தவிர்க்கவும்.
SCANNERS
Strictly For Adults
கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6- 30
Mosquito Squadren
(War Film)
இராணுவத்துக்கும் இளைஞர்களுக்கும் உள்ள போராட்டத்தைச் சித்தரிக்கும் படம்

I SPIT ON YOUR GRAVE ற்குப் பின் மீண்டும் ஓர் பயங்கரம்
லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45, 7-00
TERROR
வயது வந்தவர்கள் மட்டும்

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
JULIA
—Adults Only—

வின்ஸர் (யாழ்.)
Daily 10-30, 2-30, 6-25,
கமலஹாசன்-மாதவி
ராதா-சுலக்சனு-தேங்காய்
டிக்—டிக்—டிக்

ஸ்ரான்லி மினி
5'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Charles Brownson in
Mr. Majestic
(Adults Only)

உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
10-30, 2-30, 4-30, 6-30
Lise Danvers...... in
Immoral Tale
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

பாலகன் V. V.
(சாந்தி முன்பாக)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30, 9-30
WAR KILL
பிலிப்பைன்ஸ் இராணுவத்திற்கும், புரட்சிக்காரர்களுக்கும் இடையில் ஏற்படும் கெரில்லா யுத்தம்.
(வயது வந்தோர் மட்டும்)

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
விஜயகாந்த் - நளினி
கவுண்டமணி
அலைஓசை

நியூ சினிமாலயா
R. G. பில்டிங் (மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
10-30, 2-30, 6-00
DISCO DANCER
டிஸ்கோடான்சர்
ஆடல் பாடல் நிறைந்த இன்னிசை சித்திரம்
ஹிந்தி - கலர்
5x5 வெண்திரையில்
கண்டுகளியுங்கள்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
Daily 5 Shows
UNDER FIRE
(War Film)

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
15 வயது பணக்கார சிறுவனின் teenage ஆசைகளை பயன் படுத்தி பணம்பறிக்கும் நன்றி மறந்த காரிறைவர்பாலியல்ஆசையை தூண்டி சிறுவனை கெடுக்கும் வேலைக்காரப் பெண் ஏதும் அறியா கெடுக்கப்பட்ட சிறுவன் வேலைக்கார பெண்ணை மானசிகமாக காதலிக்கும் விபரீதம் teen age வயதில் இளைஞர்கள் செய்யும் குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்)

## ஆடிச் செவ்வாய்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆடிச்செவ்வாய் தினமான எதிர்வரும் 13-ம் திகதி காலை பத்துமணிக்கு சங்காபிஷேகம் பூசையுடன் ஆரம்பமாகி மாலை 3-30க்கு அபிஷேகம், பூசை, திரிசதி நாம அர்ச்சனையுடன் திருவிழா நடைபெற்றும்.

ஆடி வெள்ளியன்று அம்பாளுக்கு மஞ்சள்காப்பு அர்ச்சனையும் மாலையில் விசேட பூசையும் இடம்பெறும். அத் தினங்களில் விசேட பஜனை சைக் கச்சேரி பஜனைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்தில்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் ஊர்வலம் என்று பொருள்படும்.

சாஸ்திரிய நடனம் போலல்லாது, தெருக்கூத்தில் வளர்ச்சிக்குச் சங்கித லக்ஷண வித்துவான்கள் அவசியமில்லை. அது மக்களின் சமூகத் தன்மையின் தாக்கத்தால் தானா வளரக் கூடியது. சாஸ்திரீய நடனத்தைக் காட்டிலும் கிராமிய நடனங்கள் பழமையானவை. பழமையிற் பழைய எமது தெருக்கூத்து இன்று யாழ்ப்பாணத்தில் புத்துயிர் பெற்றிருப்பது எமது வரப்பிரசாதமாகும்.

CANTABIA'S NEW VENTURE
Correspondence Course In English Via Tamil
Incompetence in English can retard or even mar your future progress.
இவ் அவல நிலையிலிருந்து மீள ஓர் அரியசந்தர்ப்பம். அடிப்படையிலிருந்து O/L தராதரத்திற்குத் தபாலில் படித்துத்தேற எமது தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி உதவும். ஓய்வு நேரங்களில் இல்லங்களிலிருந்த வண்ணம் கற்கலாம். நேரமின்மை, இன்றைய சூழ்நிலையில் வகுப்புக்களைநாடிப் பிரயாணம் செய்யும் அபாயம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. எவ்வயதினரும் இலகுவில் கற்க ஏதுவான பயிற்சி நெறிகள். பயிற்சிக் காலத்திற்குக் காலக்கெடு கிடையாது. ஒவ்வொருவரது ஆர்வம், கிரகிக்கும் திறனைப் பொறுத்து அது மாறுபடும். முழுப்பயிற்சிக்கும் ரூபா 200/- மட்டுமே
Please write for prospectus and application form.
CANTABIA INSTITUTE,
21, Main Street, Jaffna. Telephone 24201
4984

மத்திய கிழக்கிற்கு
வேலைவாய்ப்பை தேடிச்செல்வோர்க்கான பயண ஒழுங்குகளை நம்பகரமான முறையில் உடனடியாக மேற்கொள்ளுவதற்கு 14-8-85க்கு முன்னர் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
அலங்கார் ஏஜென்சீஸ்
5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(9) தொலைபேசி: 23651

எமது புதிய வெளியீடுகள்
1. அன்பின் முகவரி
2. இணைந்த கோடுகள்
3. ஆசைமச்சான் } V. G. P ORIGINAL
4. ரவுடி ரஜனி
5. குடும்பம் ஒரு கதம்பம் } PYRAMID ORIGINAL
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2366
5000

## மரண அறிவித்தல்

ஐயாத்துரை
செல்லக்கண்டு
'மணி'
(மேற்கு ஜெர்மனி)



தாயின் மடியில்:
1950-08-08

இறைவனடி:
1985-08-08

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த செல்லக்கண்டு (மணி) 8-8-85 அன்று மேற்கு ஜெர்மனியில் அகால மரணமானார்.

இவர் ஐயாத்துரையின் அன்பு மனைவியும் ரமேஸ்வரனின் அன்புத்தாயாரும், V. கணபதிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், வடிவாம்பிகை, மலரகீதன், பாலச்சந்திரன் (மேற்கு ஜெர்மனி) தவரஞ்சிதம், யோகராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும், க. நவரத்தினம் (தெல்லிப்பழை உ. கூ. அதிபர் அலுவலகம்) இன் மைத்துனியும், நா. சின்னத்தங்கத்தின் அன்புப் பெருமகளும் ஆவார். இவரது ஈமக்கிரியைகள் மேற்கு ஜெர்மனியில் நடைபெறும். 7

## மரண அறிவித்தல்

### திருமதி பிறகாசம் பாக்கியம்

திருமதி பிறகாசம்பாக்கியம் காலமானார். இவர்காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் N. F. சேவியர் அவர்களின் மனைவியும், வைத்திய கலாநிதியும் சத்திரசிகிச்சை நிபுணருமான J T. சேவியர் (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), திருமதி வயலற் பிரான்சீஸ் (ஆசிரியை), டாக்டர் G. A. சேவியர் (லண்டன்), R B சேவியர் (அரசினர் வைத்தியசாலை, திருகோணமலை), திருமதி மாகிறற் ராஜேந்திரா (ஆசிரியை கொழும்பு), பேனுட் சேவியர் (எஞ்ஜினியர், அவுஸ்திரேலியா), திருமதி றீற்று சேவியர் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி யஸ்மின் சேவியர், சட்டத்தரணி S S பிரான்சீஸ் (யாழ். மரண விசாரணை அதிகாரி), டாக்டர் இவோன் சேவியர் (லண்டன்), திருமதி சிசிலியாச் சேவியர், சட்டத்தரணி E. A. ராஜேந்திரா (கொழும்பு), திருமதி யூடி சேவியர், திரு. D. F. சேவியர் (முன்னாள் யாழ். துணை முதல்வர்) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இல 680, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று 11-08-85 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

RECEIVED 12 1985 PERIODICALS

தமிழ்த் தீவிரவாதிகள்

# திருகோணமலை நகரிலிருந்து தமிழரை வெளியேறுமாறு வேண்டுகோள்

(திருகோணமலை)

திருமலை நகரத்தில் வாழும் தமிழர்களை 24 மணித்தியாலத்திற்குள் வெளியேறுமாறு ஆயுதந்தாங்கிய தீவிரவாதிகள் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் குச்சவெளிக்கும் திரியாய்க்கும் சென்றுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலநறுவைப் பகுதியிலுள்ள திருகோணமடு, கண்டகட்டுவ குடியேற்றத்திட்டங்களிலுள்ள சிங்களக்குடியேற்றவாசிகளையும் வெளியேறுமாறு தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனராம்.

சுமார் 250 சிங்களக் குடும்பங்கள் கலால விவசாயப்பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர் இவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பொலநறுவ அரசாங்க அதிபரும் உத்தியோகத்தர்களும் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

கந்தளாய்ப்பகுதியில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட தீவிரவாத சந்தேக நபர்களிடமிருந்து பல பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இப்பத்திரங்களில் பல இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட தீவிரவாதத்தலைவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாகவும்கூறப்படுகிறது.

தாக்குதல் நடத்துவதற்கு முன் இறுதி முடிவு எடுக்க உள்ளூர்த் தீவிரவாதத்தலைவர்கள் கிளிநொச்சியில் சந்திப்பது பற்றியும், ஒரு பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். இவர்கள் தமிழ் மக்கள் விடுதலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனபொலிஸார் கருதுகின்றனர்.

சில பத்திரங்களில் உள்ளூர் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (க)

# நெதர்லாந்தில் இருந்து 1200 இலங்கைத் தமிழர் வெளியேறினர்

[அம்ஸ்ரடாம்]

நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம்கோரி அங்கு தங்கியிருந்த சுமார் மூவாயிரம் இலங்கைத் தமிழர்களில் 1200 பேர்வரையில் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

நெதர்லாந்தில் தங்கியிருந்த இந்த இலங்கைத் தமிழர்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தமக்கு அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இவர்களில் 10 பேருக்கு மட்டுமே அந்த நாட்டு அரசாங்கம் இதுவரை அரசியல் தஞ்சம் வழங்கியிருந்தது. ஏனையோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இலங்கைத் தமிழர்களுக்கு நெதர்லாந்து அரசாங்கம் அரசியல் தஞ்சம் வழங்கும் விவகாரத்தில் மிக கண்டிப்பாக இருப்பதினால் அரசியல் தஞ்சம் வழங்கப்படாத ஏனைய இலங்கைத் தமிழர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளனர் என்றொரு செய்தி இவர்கள் மத்தியில் அடிபட்டதினாலேயே அவர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த 1200 பேரையும் பிரயாண முகவர் ஏஜென்சி ஒன்று பஸ்களில் ஏற்றி பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

இந்த 1200 பேரும் பிரான்ஸில் தங்கியிருக்கலாம் அல்லது மேற்கு ஜெர்மனிக்கு செல்லக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நெதர்லாந்தில் தங்கியிருக்கும் ஏனைய இலங்கைத் தமிழர்களும் தாம் இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்துடனேயே வாழ்கின்றனராம்.

## இன்று வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலக அமைதிவேண்டி யாழ். திவ்யஜீவன சங்கம் இன்று மகா மிருத்தியுஞ்ஜய மந்திர ஜெபம் நடத்துகின்றது. திவ்ய ஜீவன மண்டபத்தில் இன்று காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் இவ்வழிபாடு நிகழும்.

## லட்சார்ச்சனை

நவாலி அருள்மிகு அட்டகிரி கந்தசுவாமி கோவில் ஸ்ரீ நாராயணப் பெருமானுக்கு நாளை காலை ஏகதின லட்சார்ச்சனையும் ஹோம வழிபாடும் இடம்பெறவுள்ளன.

## ஐந்து பொலிசார் பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயது, ஆகியோரும் இவர்களுடன் எரு ஏற்றுவதற்கு உதவியாக வந்த வவனியா குசைப்பிள்ளைகுளத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் (45 வயது), மற்றும் கே. கோவிந்தசாமி [52 வயது-நொச்சிமோட்டை ஓமந்தை] படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டவர்களில் சிலராவர்.

வவனியா நகரிலுள்ள பூந்தோட்டப்பகுதியிலிருந்து 8 பேரின் சடலங்களும் மேலும் இரு சடலங்களும் கொண்டு வரப்பட்டு வவனியா பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நேற்றுப் பகல் பூராகவும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்தன. ஹெலிகொப்டர் தாழ்வாகப் பறந்து சுட்டது.

கனகராயன்குளம் பஸ் ஒன்றை நோக்கிப் பொலிசார் சுட்டதில் பஸ் கண்ணாடிகள் சிதறியன, பஸ்ஸிலிருந்த நடத்துநர் விசுவலிங்கம் காயமடைந்தார்

வீடுகள் எரிக்கப்பட்டதால் மக்கள் பீதியடைந்து வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வவனியா பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி சொர்ணபாலா, செயலாளர் டாக்டர் எஸ். வி பரராஜசிங்கம் ஆகியோர் வவனியா பொலிஸ் அதிபர், இராணுவ அதிகாரி ஆகியோருடன் தொடர்பு கொண்டு அமைதி நிலவ நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். [மா]

## ஒன்பது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு விரும்புகிறது. இதற்கான தேர்தல் மாவட்ட அடிப்படையில் நடத்தப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பதில் தான் மிகவும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது கிழக்குமாகாணம் பல இன மக்கள் வாழும்பிரதேசமாகும். தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் அங்கே தொன்றுதொட்டு வாழ்ந்துவருகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் ஒருபகுதியில் சிங்களச்சட்டம் நடைமுறையிலுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இன்று இரண்டு லட்சத்து எண்பதாயிரம் சிங்கள மக்கள் வாழ்கின்றனர் முஸ்லிம் மக்களும் வாழுகின்றனர் இதனால் அது பல இன மக்கள்வாழும் பிரதேசமாகவே கருதப்படுகின்றது

''அதிகாரங்களைப் பரவலாக்குவதால் மட்டும் இந்தப்பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியாது. கல்வி, வேலைவாய்ப்புபோன்ற துறைகளில் நாம் தீவிரகவனம் செலுத்த வேண்டும். இந்த இரண்டு அம்சங்களிலும் கவனம் செலுத்தப்பட்டால் அதிகாரப்பரவலாக்கல் அவசியமற்றதாகி விடும்.

இந்தப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு எப்போதும்பரிகாரம் ஆகாது''

## ஆயுத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது. இதனால் தீவுப் பகுதியில் பதற்றம்நிலவுகிறது.

### ஹொரவப்பொத்தானையில்

[வவனியா]

ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள வீடொன்றில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

எஸ். சண்முகம் என்பவர் வீட்டில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இனந்தெரியாத ஆறு நபர்கள் வீட்டுக்குள் புகுந்து ரி. வி. டெக், ரொக்கப்பணம் உட்பட ஒருலட்சம் ரூபாவை கொள்ளையடித்துள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## மாமடு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இரவு ரோந்து பாதுகாப்பு நடவடிக்கைக்கு மட்டுமே இம்முகாம் பயன்படுத்தப்படுகின்றது. இரவு வேளைகளில் மட்டுமே இங்கு இராணுவத்தினர் இந்த முகாமில் தங்கி உள்ளனர்.

அப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடனேயே இம்முகாம் நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

இது இவ்வாறிருக்க பாவற்குளம், வாரிக்குட்டியூர், உலுக்குளம் பகுதிகளிலிருந்து பெரும்பாலான சிங்களமக்கள் வெளியேறிக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது மாமடுவப் பகுதியிலிருந்தும் கணிசமானவர்கள் வெளியேறியுள்ளனர் எனத் தெரியவருகின்றது இவர்கள் அனுராதபுர மாவட்டத்திற்குச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது

## சம்பிரதாய...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரியர்கள் மேடையில் இருந்தனர். மண்டப வாயிலை உபவேந்தரும் வேந்தரும் வந்தடைந்ததும் மங்கள வாத்தியம் இசைக்கப்பட்டது. எல்லோரும் எழுந்து நிற்க வேந்தர் மேடையில் தமது ஆசனத்தில் அமர்ந்தார்

பட்டமளிப்பு நிகழ்ச்சி இரு பிரிவுகளாக நடைபெற்றது

கலாநிதி, முதுகலைமாணி, முதுமெய்யியல்மாணி, பட்டப்பின் படிப்புக் கல்வித் தகைமைச் சான்றிதழ், கலைமாணி, வணிகமாணி, பருத்துவ சத்திர சிகிச்சைமாணி, இசைக்கலைமாணி, நாட்டியக்கலைமாணி ஆகியவற்றில் பட்டம் பெறுவோர் பட்டியல்களை பீடாதிபதிகள் வாசிக்க, அவர்கள் வரிசையாக மேடை மீதேறி வந்து வேந்தரிடம் பெற்றுக்கொண்டனர்.

[பட்டம் பெற்றோர் பற்றிய விபரம் நாளை வெளிவரும்]

## பென்சன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் அல்லது செயலாளர் தங்கள் முகவரிகளைக் கூடிய விரைவில் த. குலசேகரம், உதவி அரசாங்க அதிபர், (பொதுசன தொடர்பு) கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பும்படியர் வேண்டுகோள் விடுத்துள்ளார் இவை கிடைக்கப்பெற்றதும் அச்சங்கங்களை அரசாங்க அதிபர் சந்திப்பதற்குரிய தேதி அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் இரசயனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the G.P.O. Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389, 24126,

## மரண அறிவித்தல்

### பொன்னையா கோபாலபிள்ளை

அன்னார் கந்தர்மடம் குமாரசாமி வீதியைச்சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், பாக்கியத்தின் அன்புக்கணவரும் தியாகலிங்கம்(இத்தாலி), நடேசலிங்கம் (இத்தாலி), நகுலேஸ்வரி, சந்திரலிங்கம் (இத்தாலி), சாந்தலிங்கம், தவலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்வரத்தினத்தின் அன்புச் சகோதரரும் ஆவர். ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (11-8-85 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று கோக்குவில் மயானத்தின் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

11

தகவல்
T. P. செல்வரத்தினம்

## மரண அறிவித்தல்

### சிவகாமிப்பிள்ளை

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவகாமிப்பிள்ளை காலமானார் இவர் சப்பையாவின் அருமை மனைவியும் காலம்சென்ற தம்பிப்பிள்ளை பராசத்தியின் அன்பு மகளும், தபால் ஊழியர் தருமலிங்கம், கிருஷ்ணசாமி (கொழும்பு வர்த்தகர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும். பவளராணி, ஏகநாயகி, திருச்செல்வம், புஸ்பராணி, விக்கினராஜா (ஜெர்மனி) ஆகியோரின் அருமைத்தாயாரும், சொர்ணம்மா, தர்மலிங்கம், சரோஜினிதேவி, கிருஷ்ணசாமி ஆகியோரின் அருமை மைத்துனியும், வைத்தியநாதன், கனகலிங்கம், செல்வானந்தன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவர். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 11-8-85 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மணற்காடு மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

12

## மரண அறிவித்தல்

### திரு. முருகேசு இராசதுரை

கரவெட்டி வடக்கு நெல்லியடியைச் சேர்ந்த திரு. முருகேசு இராசதுரை (Governing Director, Technical Supplies Ltd Colombo) காலமானார் இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பவானந்தன் (U S A) திருமதி பானுமதி சிவபாலன் (U S. A), சாந்தி, ஜெனி, அக்கயா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை) ரஞ்சன் [ஹாட்லி கல்லூரி பருத்தித்துறை], ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், முருகேசு சிவபாலன் Engineer, U. S A) அவர்களின் அன்பு மாமனாரும், திருமதி கனகம்மா கந்தசாமி, முருகேசு, ஆறுமுகம் (U.K), அவர்களின் அன்புச் சகோதரரும் வே. குணரட்ணம் அவர்களின் அன்புமைத்துனரும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் [11-8-85] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அவரின் மகாத்மா லேன், கரவெட்டி வடக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமபடி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: க. ராமச்சந்திரன்
நெல்லியடி, கரவெட்டி.

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org